விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 25 புதன்கிழமை (10.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 356

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL

CALL :- 222 5908/222 8812

## கரு ஜெயசூரியவுக்கு பிரதித் தலைவர் பதவி

# ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடு அதிகரிப்பு!

## ரணிலுக்கு எதிராகப் போர்க்கொடி

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி வந்த அமைச்சர் கரு ஜெயசூரியவுக்கு ஐ.தே.கவின் பிரதித் தலைவர் பதவியை ரணில் விக்கிரமசிங்க வழங்கியதை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் சிறிகோத்தாவில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கட்சியின் மூத்த உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பெருங்கடலில் நேற்று நிலநடுக்கம்

இந்தியப் பெருங்கடலில் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகருக்கு தென்மேற்கே 2453 கி.மீ. தொலைவில் நடுக்கடலில் நில நடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 6.4 ஆக பதிவாகி இருந்தது.

இந்திய நேரப்படி நில நடுக்கம் செவ்வாய் அதிகாலை 01.39 மணியளவில் நிகழ்ந்துள்ளது .கடல் மட்டத்தின் அடியில் 10கி.மீ. தொலைவில் நில நடுக்கம் மையம் கொண்டிருந்ததாக நிலவியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். சுனாமி பீதி தேவையில்லை என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ச-5)

## முல்லைத்தீவைக் கைப்பற்ற ஏழு கிலோமீற்றரே உள்ளது

### பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைமையகம் அமைந்திருக்கும் கிளிநொச்சியை கைப்பற்ற முன்னேறிவரும் இராணுவத்தினர் முல்லைத்தீவை கைப்பற்றுவதற்கு இன்னமும் 7 கிலோமீற்றர் தூரமே எஞ்சியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இராணுவத்தினர் முல்லைத்தீவு -அலம்பில் வீதியின் வடபகுதியூடாக ஏற்கனவே மூன்று கிலோமீற்றர் தூரம் முன்னேறிச் சென்றுள்ளனர்.

முல்லைத்தீவிலிருந்து 7 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் படையினர் தமது நிலைகளை பலப்படுத்தியுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு செயலர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட உயர் பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இக்குழுவினரை பலாலியில் வைத்து யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி வரவேற்றார்.

யாழ்.வந்த பாதுகாப்புச் செயலர் தற்போதைய பாதுகாப்பு நிலைகள் தொடர்பில் யாழ்.இராணுவத் தளபதி, முன்னரங்க கட்டளைத் தளபதிகள், பிரிகேட் தளபதிளைச் சந்தித்து (12ஆம் பக்கம் பார்க்க)

## 2011-2012இல் உலகப் போர்? பிரஞ்சு மேதை அதிர்ச்சித் தகவல்

### பாவச் செயலை நிறுத்துவதே பரிகாரமாம்

(சென்னை)

2011-2012 இல் மூன்றாவது உலகமகா யுத்தம் வரப் போகின்றது. இந்த அதிர்ச்சித் தகவலை 500 ஆண்டுகளுக்கு முன்னர் பிரஞ்சு மேதை நாஸ்டர் டாமஸ் கணித்துள்ளார்.

இதனைத் தடுப்பதற்கு பாவச் செயல்கள் செய்வதை நிறுத்தி தினமும் இறைவனை நன்றாகப் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்றும் அவர் பரிகாரம் கூறியுள்ளார்.

இந்த இயல்பான உற்சாகமான வாழ்க்கையில் 'உலக மகா யுத்தம்' என்ற பெயரில் மீண்டும் ஒரு சுனாமி வரப் போகிறதா? நினைத்துப் பார்க்கவே நெஞ்சு திக்,திக் என்கிறது.

மும்பையில் கடந்த 26 ஆம் திகதி நடந்த அந்த பயங்கர சம்பவம் உலகம் முழுக்க புயல் அடித்த தீ (02ஆம் பக்கம் பார்க்க)

## 64 லொறிகளில் உணவுப் பொருட்கள்

(வவுனியா)

வன்னிப் பகுதிக்கு 50 லொறிகளில் உலக உணவுத் திட்டத்தின் நிவாரண உணவுப் பொருட்கள் உட்பட 64 லொறிகளில் உணவுப் பொருட்கள் செவ்வாய்க்கிழமையன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக வன்னிப் பகுதிக்குச் செல்ல முடியாமல் வவுனியாவில் தங்கியிருந்த அரச அதிகாரிகள் மற்றும் பொது மக்களும் வன்னிப் பகுதிக்குச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வாகனத் (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதியின் கருத்துக்கு வருத்தம் தெரிவித்தார் கோத்தபாய

(புதுடில்லி)

தமிழக அரசியல் தலைவர்கள் குறித்து இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்த கருத்துக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்தது.

இதையடுத்து இராணுவத் தளபதியின் கருத்துக்கு இலங்கை அரசு வருத்தம் தெரிவித்தது.

இலங்கை இராணுவ தளபதி பொன்சேகா அண்மையில் அளித்த பேட்டியில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் இருவரும் அரசியல் கோமாளிகள் என்று வர்ணித்திருந்தார். இந்த அரசியல் கோமாளிகள் பேச்சைக் கேட்டு, போர் நிறுத்தம் செய்யுமாறு இலங்கையை இந்தியா நிர்பந்திக்காது என்றும் அவர் கூறினார்.

இவர்கள் விடுதலைப் புலிகளின் தயவில் கட்சி நடத்துபவர்கள். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு (12ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருட்களின் விலைகள் ஒரு வருடத்திற்கு அதிகரிக்காது

### ஜனாதிபதி மகிந்த உரை

(கொழும்பு)

பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளை ஒரு வருட காலத்திற்கு அதிகரிக்காமல் இருப்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கரவலப்பிட்டியில் உள்ள இரட்டை செயற்பாட்டு சுழற்சி மின் உற்பத்தி நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து முழு நாடும் விடுவிக்கப்படும் நாள் வெகு தொலைவில் (12ஆம் பக்கம் பார்க்க)

## நுளம்புகளிலிருந்து உங்களைப் பாதுகாக்க

- நுளம்புகள் உற்பத்தியாகும் நீர் தேங்கி நிற்குமிடங்களை அழியுங்கள்.
- நுளம்பு வலைகளைப் பாவியுங்கள்-மருந்தூட்டப்பட்ட நுளம்பு வலைகளைப் பாவிப்பது சிறந்தது.
- நுளம்புகளை விரட்ட நுளம்புத் திரிகளை அல்லது மின்சாரம் மூலம் இயங்கும் நுளம்பு விரட்டிகளைப் பாவியுங்கள்.
- நுளம்புகள் அதிகமாயுள்ள வேளைகளில் நுளம்புகளை விரட்ட வேப்பிலை போன்றவற்றால் புகையூட்டலாம்.
- பகலில் நுளம்புகள் உள்ள இடங்களில் நுளம்புக்கடியிலிருந்து பாதுகாக்க கை,கால்களை மூடக்கூடிய நீளமான ஆடைகளை அணியுங்கள்.
- நுளம்புகளின் குடம்பிகளையுண்ணும் திலாப்பியா, யப்பான் போன்ற மீனினங்களை கிணறுகள், நீர்நிலைகளில் வளர்க்கலாம்.
- நுளம்புகளை விரட்டும் மணம் கொண்ட சித்திரனெல்லா எண்ணை, சித்தாலேப போன்றவற்றை உடலில் பூசலாம்.

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

அனுசரணை

care CARE International

(C-1814)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசுத்தின நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உரையாற்றுவதையும் மேடையில் பாடசாலை அதிபர் திருமதி செ.சகாதேவன் அமர்ந்திருப்பதையும் நிக்கொட் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் என்.எஸ்.ஆர். சிவரூபன் மாணவி ஒருவருக்கு பதக்கம் அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.
படங்கள்:ராம்சன்ராஜ்

# இன ஒடுக்குமுறை இடம்பெறக் கூடிய நாடுகளின் வரிசையில் இலங்கை

உலகின் இன ஒடுக்கு முறை இடம் பெறக் கூடிய சாத்தியம் காணப்படும் நாடுகளின் வரிசையில் இலங்கையும் இடம் பெற்றுள்ளதாக ஐக்கிய நாடுகளின் அறிக்கையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இன ஒடுக்கு முறைகள் குறித்து ஆராயும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஐந்து வெவ்வேறு நிறுவனங்களின் அறிக்கை களிலும் இலங்கையின் பெயர் முன்னிலை பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மொத்தமாக உலகின் 33 நாடுகளில் இன ஒடுக்கு முறை ஏற்படக் கூடிய அபாயம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. மிகவும் மோசமான இன ஒடுக்கு முறை இடம் பெறக் கூடிய நாடுகளின் வரிசையில் சூடான், கொங்கோ, மியன்மார், பாகிஸ்தான், சோமாலியா மற்றும் இலங்கை ஆகியன சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

இன ஒடுக்குமுறை இடம்பெறும் நாடுகளுக்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும், சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பின் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பொருளாதாரத் தடைகளோ அல்லது இராஜதந்திர அழுத்தங்களின் மூலமாகவோ மட்டும் இந்த நிலைமையை கட்டுப் படுத்த முடியாதென ஐக்கிய நாடுகளின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (ச-5)

# மன்னாரில் திடீர் தேடுதல்

(மன்னார்)

மன்னார் நகரப் பகுதியை மையமாகக் கொண்டு நேற்று செவ்வாய்க் கிழமை திடீர் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.


மன்னாரில் சில நாட்களாக அடுத்தடுத்து நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களை அடுத்து மன்னாரின் நகரப் பகுதி மற்றும் புறநகர்ப்பகுதிகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் கூட்டு ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருப்பதுடன் திடீர் சுற்றிவளைப்பு தேடுதலையும் நடத்தியுள்ளனர்.

நேற்றைய தினம் பிரதான வீதிகள் ,குறுக்கு வீதிகள் ஊடாக மன்னார் நகருக்குள் பிரவேசிக்கும் பிரயாணிகளின் அடையாள அட்டைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் ,வாகனங்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மன்னார் , தலை மன்னார் பிரதான வீதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பயணித்த பாதசாரிகள், வாகனங்கள், துவிச்சக்கர வண்டிகள் இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டு தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (ச-5)

# கப்பம் பெற்ற குற்றச்சாட்டில் கைதான நபரிடம் விசாரணை

## பயன்படுத்திய வானும் பொலிஸாரால் மீட்பு


மீட்கப்பட்ட வான்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் முள்ள வர்த்தகர்கள் மற்றும் தமிழ் மக்களிடம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பி னர் என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு குறித்த வர்த்தகர்களை அச்சுறுத்தி கப்பம் பெற்று வந்த நபர் ஒருவரை கொழும்பு ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்பயன் படுத்திய வான் ஒன்றினை யும் பொலிஸார் மீட்டுள்ளனர். கொழும்பு ஆட்டுப் பட்டித் தெரு வர்த்தகர் ஒருவரிடம் இருந்து 50 ஆயிரம் ரூபா பணம் கப்பமாக கோரியதை யடுத்தே கடந்த சனிக்கிழமை பொகவந்தலாவை நகரில் வைத்து இவர் கைது செய்யப் பட்டார்.

கைது செய்யப்பட்ட குறித்த நபர் அன்பழகன் என்னும் பெயரில் வர்த்தகர்களிடம் கப்பம் பெற்று வந்தமை தெரியவந்துள்ளதாக ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கீர்த்தி போதிபக்ஷ தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என தன்னை அடையாளப்படுத்திக் கொண்டே இவர் வர்த்தகர்களிடம் கப்பம் கோரியுள்ளதாகவும் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

குறித்த நபர் பல வர்த்தகர்களிடம் கப்பம் பெற்றுள்ளதாகவும் இவரிடம் கப்பம் செலுத்திய சிலர் அதற்கான ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளதாகவும் இவருக்கு கப்பம் செலுத்திய ஏனைய வர்த்தகர்களும் அதற்குரிய ஆதாரங்களை சமர்ப்பித்தால் விசாரணைக்கு உதவியாக இருக்கும் என்றும் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை கப்பம் வழங்கியமை தொடர்பாக யாழ்ப்பாண வர்த்தகர்கள், மற்றும் பொதுமக்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந் தால் அதன் அடிப்படையிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென ஆட்டுப்பட்டி தெரு பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

# 2011-2012இல் உலகப் போர்?...

போல் பரவியபடி இருக்கிறது. ஒரு மிகப் பெரிய போர் ஏற்படும் சூழ்நிலை இருப்பதாக உலக நாடுகள் உணர்கின்றன.

பயங்கரவாதத்தை ஒழித்தே தீரவேண்டும் என எல்லா நாடுகளுமே ஒருமித்த கொடி பிடிக்க ஆரம்பித்து விட்டன.

என்ன நடக்கப்போகிறதோ என இந்தியா -பாகிஸ்தான் இரு நாட்டு எல்லைப்பகுதிகளிலும் திகில் உறைந்து போய்க் கிடக்கிறது.

உலகம் அழியும்வரை என்னவெல்லாம் நடக்கும் என்பதை 500 ஆண்டுகளுக்கு முன்பே சொல்லி வைத்துவிட்டுப் போயிருக்கிறார் ஒருவர். பெயர்: நாஸ்டர் டாமஸ், ஊர்: பிரஞ்சில் உள்ள புனித ரெமிடி, பிறப்பு: 1503, இறப்பு: 1566. நாஸ்டர் டாமஸ் உலக மறிந்த மகாஞானி.இவர் கணித்துச் சொன்ன எந்த விஷயமும் தப்பியதில்லை.

தனது தாத்தா மூலம் கணக்கு, கலை, ஜோதிடம் ஆகியவற்றை சிறு வயது முதலே கற்ற நாஸ்டர் டாமஸ் மரணத்தை தழுவும் நிலையில் இருந்த பலரையும் காப்பாற்றிய மருத்துவருமாவார். 1532இல் நாஸ்டர் டாமஸ்ஸுக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருந்தபோதிலும் அடுத்த மூன்று ஆண்டுகளில் அவர்கள் மூவரையுமே பிளேக் நோய்க்கு பறிகொடுத்துவிட்டார்.

இதன் பின்னர் ஆறு ஆண்டுகள் பிரெஞ்சு,இத்தாலி ஆகிய நாடுகளில் கால் போன போக்கில் சென்றபோதுதான் திடீர் ஞானியாகி உலக விஷயங்களைக் கணித்து சொல்ல ஆரம்பித்தார்.

ஒரு மத பிட்சு மூலம் பல கலைகளை கற்ற அவர், ஒரு தடவை சொன்னா அது நூறு தடவை சொன்ன மாதிரி?

### இந்தியா -பாக்.இடையே போர் வருமா?

ஒரு உலக மகா யுத்தத்தை இந்த இரண்டு நாடுகளும் தான் ஆரம்பித்து வைக்கப் போகின்றன என்ற அதிர்ச்சித் தகவல்களை அவர் எப்போதே சொல்லி விட்டு போயிருக்கிறார். 2006 ஆம் ஆண்டிலிருந்தே இந்தியா பல சோதனைகளைச் சந்திக்கத் தொடங்கும் பட்சத்தில் ஒரு உச்சக்கட்ட காட்சியாக 2011 அல்லது 2012 இல் மூன்றாவது உலகப் போர் ஏற்படும் என்றார்.

இந்தப் போர் இடைப்பட்ட எந்த ஆண்டில் வேண்டுமானாலும் நிகழலாம்! மக்களின் அப்போதைய இறை பக்தியை பொறுத்திருக்கிறது என்பதையும்

அவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

இந்தியா-பாகிஸ்தான் என எதிரும் புதிருமான இந்த போரில் அமெரிக்கா,ரஷ்யா, சீனா,சவூதி அரேபியா,சிரியா,இஸ்ரேல், ஜெர்மனி,பிரான்ஸ்,லெபனான்,ஈரான்,அவுஸ்திரேலியா என உலகின் 21 நாடுகள் முக்கிய களமிறங்கும் என்கிறார் அவர்.

வானத்தில் சனி-ராகு கிரகங்களின் புதிய மாற்றத்தால் இந்தபோர் ஏற்படும். போர் சமயத்தில் அணு ஆயுத வீச்சுகளால் கடல் அலை 100 அடிக்கு எழுந்து ஓயும். சுமார் 100 கோடி பேர் மரணத்தை தழுவினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிறார் நாஸ்டர் டாமஸ்.

இதன் பின்னர் 2026 வாக்கில் உலகின் நம்பர் வன் நாடாக இந்தியாவும், 2ஆவது நாடாக சீனாவும் விளங்கும் என்று கணித்திருக்கிறார் நாஸ்டர் டாமஸ்.

போரை பொறுத்த வரை இந்தியாவில் பஞ்சாப்,குஜராத்,ராஜஸ்தான் மாநிலங்களும் எல்லை பகுதிகளும் பாதிக்கப்படும் என்பதையும் அவர் சொல்லியிருக்கிறார்.

இந்தியர்கள் 2006இற்கு பிறகு தங்கள் வாழ்க்கையில் பல வகையான மாற்றங்களை காண்பார்கள். மிகப்பெரிய பொருளாதார சிக்கலில் சிக்கி திணறுவார்கள். இறை பக்தி குறையும். அரசியலில் பல மாற்றங்கள் நிகழும். உண்மை தோல்வியைதழுவும். பொய் வெற்றி பெறும். மக்கள் அலை பாய்ந்து திரிவார்கள்.

இத்தகைய சுமார் 20 ஆண்டு போராட்டத்திற்கு பிறகு இளைய தலைமுறை குழந்தைகளால் மிகப்பெரிய மாற்றம் ஏற்படும். பெற்றோர்கள் மற்றும் வயதானவர்களால், அவர்களின் அறிவை புரிந்து கொள்ள முடியாமல் ஆச்சரியப்பட்டு போவார்கள்.

இந்தியா மிக நவீனமாகி விடும். பணம் கொழிக்கும். அனைவரது வாழ்க்கையும் மிக நவீன நாகரிகமடையும். மேலை நாடுகளை போன்ற வாழ்க்கை தரத்திற்கு மாறி விடுவார்கள். உலக அரங்கில் இந்தியா தலை சிறந்து விளங்கும்.

### பாவச் செயலைத் தவிருங்கள்

இப்படியெல்லாம் இந்தியா பற்றி சாதக பலனை சொல்லியிருக்கும் நாஸ்டர் டாமஸ் மேற்கண்ட 20 ஆண்டு கால போராட்டத்தை ஒவ்வொருவரும் எப்படி சமாளிப்பது என்ற ஆலோசனையும் வழங்கியிருக்கின்றார்.

ஒரு நாட்டில் பாவ செயல்கள் பெருகும் போது அந்த நாட்டின் அதற்குரிய சிக்கலையும், கஷ்டங்களையும் அனுபவிப்பார்கள். எனவே, பாவ செயல் செய்யாது அன்புடன் இருங்கள். அவரவர் வீட்டில் தினமும் இறைவனை நன்றாக பிரார்த்தனை செய்யுங்கள்.

இத்தகைய பிரார்த்தனை செய்யும் போது மட்டும் தான் மனம் தெளிவடையும். நல்ல சிந்தனை பிறக்கும். நெஞ்சு தைரியம் உண்டாகும். நீங்கள் இதை செய்யாவிட்டாலும் இறை சக்தி மிகப்பெரியது. அது செய்ய வைக்கும் என்கிறார் அவர். நாஸ்டர் டாமஸ் சொல்வது சரிதான்; எதை கொண்டு வந்தோம். கொண்டு செல்வதற்கு? (ச-5)

**அன்பு வாசகர்களே!**

**வெள்ளப் பெருக்குத் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் தகவல்கள் தங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. தங்களால் தரப்படும் புகைப்படங்கள், தகவல்கள் இப்பகுதியில் சேர்க்கப்படும். நேரிலோ தபால் மூலமோ விரைவில் ஒப்படைத்து உதவவும். (ஆ-ர்)**

# இன்று ஒரு தகவல்

## பணியில் நேர்மை

ஒருவர் இன்னொருவரிடம் ''சேர் உங்கள் சைக்கிளை ஒருநாள் இரவல் கொடுங்கள். பக்கத்து ஊருக்குப்போக வேண்டியிருக்கிறது'' என்றார்.

''இவர் சைக்கிளைக் கொடுத்து பத்திரமாக கொண்டுபோங்க''என்றார்.

''இதைப் பத்திரமாக கொண்டு போகிறேன். கவலையே வேண்டாம். ஏனென்றால் இதை உங்களுடைய சைக்கிளாக நான் நினைக்கவில்லை. என்னுடைய சைக்கிளாகத்தான் நினைக்கிறேன்'' என்றார்.

அதற்குப் பின்னர்தான் இவருக்கு உண்மையாகவே பயம் வந்தது. அவர் சொன்னது. போலவே அதை தன்னுடைய சைக்கிளாக நினைத்து கொண்டு போய்விட்டால் என்ன செய்வது?

எது எதை நம்முடையதாக நினைக்கவேண்டும் என்பதற்கு ஒருவரையறை இருக்கிறது.

அலுவலகத்தையே வீடாக நினைப்பவர்களும் உண்டு.

அப்படிப்பட்டவர்கள் கூட வீட்டை அலுவலகமாக நினைப்பதில்லை. ஏனெனில் வீட்டில் அவ்வாறு நடந்துகொள்ள முடிவதில்லை.

பொறியியல் மேதை டாக்டர் விசுவேசுவரய்யா அலுவலக வேலை வேறு சொந்த வேலை வேறு என்பதற்கு ஒரு உதாரணமாக இருந்தவர்.

அவர் மைசூர் மகாராஜாவிடம் திவானாக இருந்தவர். ஒருநாள் அரசாங்க வேலை காரணமாக வெளியூர் போயிருந்தார். ஹாசன் என்ற ஊருக்குப் பக்கத்தில் ஒரு பயண மாளிகை இருந்தது. அங்கு இரவு தங்கி விடிந்ததும் ஊருக்குத் திரும்பத்திட்டமிட்டிருந்தார்.

அரசாங்க பைல்களை பார்த்துக்கொண்டிருந்ததால் இரவு தூங்குவதற்கு அதிக நேரமாகிவிட்டது. ஒருவழியாக எல்லாவேலைகளையும் முடித்தார்.

அதற்குப் பின்னர் தனது சூட்கேஸைத் திறந்து அதிலிருந்து இரண்டு மெழுகுவர்த்திகளை எடுத்துக்கொளுத்தி வைத்தார்.

அதுவரை எரிந்துகொண்டிருந்த மின்சார விளக்குகளையெல்லாம் அனைத்து விட்டு அந்த மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் சில புத்தகங்களை தொடர்ந்து படிக்க ஆரம்பித்தார்.

அந்த பயண மாளிகையில் பணியாளராக இருந்தவர் இதைப் பார்த்துவிட்டு ஓடி வந்து மின் விளக்கை போடுவதற்காக போனார். விசுவேசுவரய்யா அதைப் பார்த்துவிட்டு போடவேண்டாம் என்றாராம்.

''இதுவரைக்கும் நான் அரசாங்க அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருந்தேன். அதனால் அப்பொழுது மின்விளக்குகள் எரிந்ததில் தப்பில்லை. இப்பொழுது நான் புத்தகம் படித்துக்கொண்டிருக்கிறேன். இது என் சொந்த வேலை. அதற்காக இங்கிருக்கும் மின்விளக்குகள் ஏன் எரியவேண்டும்?'' என்றாராம்.

இந்த சம்பவத்தை இப்பொழுது உள்ள சில அரசுப் பணியாளர்களிடம் பேச்சோடு பேச்சாக சொல்லிப் பார்த்தேன். அவர்களால் இதை ஜீரணிக்கவே முடியவில்லை.

நேர்மை தேவைதான் அதற்காக அவ்வளவு தூரத்துக்கு அது தேவையா? என்று அவர்களுக்குத் தோன்றியிருக்கிறது.

விசுவேசுவரய்யா நடந்து கொண்ட விதம் தான் ஒரு நேர்மையாளர் என்று இந்த உலகத்திற்கு நிரூபிக்கவேண்டும் என்பதற்காகவல்ல! தான் அப்படி நடந்து காட்டினால் மற்றவர்களும் அரசுப்பணியில் நேர்மையை கடைப்பிடிக்க முயற்சி பண்ணலாமே என்பதற்காகத்தான்!

இப்பொழுதும் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் அலுவலகம் வேறு வீடு வேறு என்று நினைப்பதில்லை! அவ்வளவு உரிமை.

ஒருவருக்கு அப்படித்தான் அவசரமாக 5 ஆயிரம் ரூபா தேவைப்பட்டது.

அலுவலகப் பணத்தினை எடுத்துக்கொண்டார். அந்த நேரம் பார்த்து கணக்காய்வு நடந்து அகப்பட்டுக் கொண்டார். விசாரணை நடந்தது.

அவர் சொன்னார்: ''சேர்... நான் நேரம் காலம் பார்க்காமல் வேலை செய்வேன். ஏனென்றால் அதை எனது அலுவலகமாக நினைக்கிறேன். அவசரத்துக்கு அந்தப் பணத்தை எடுத்தேன். வைத்துவிடலாம் என்றுதான் இருந்தேன். அதற்குள் இப்படி ஆகிவிட்டது. நீங்க என்ன நினைத்தாலும் சரி நான் அலுவலகம் வேறு- வீடு வேறு என்று நினைக்கவில்லை. அது என்னுடைய சுபாவம் !'' என்றார்.

விசாரணை செய்தவர் தீர்ப்பு வழங்கினார்.

''உங்களுடைய சுபாவத்துக்கு மதிப்பு கொடுத்து நானும் தீர்ப்பு வழங்குகிறேன். நீங்கள் கொஞ்ச நாள் ஜெயிலில் இருந்துவிட்டு வாங்க! அது உங்களுக்கு கஷ்டமே இருக்காது என்று நினைக்கிறேன். ஏனென்றால் அங்கு போனாலும் நீங்கள் உங்கள் சுபாவப்படி வீடு வேறு - ஜெயில் வேறு என்று நினைக்க மாட்டீங்க'' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க. பொ. த (சா/த) பரீட்சையில்

## முதல் தடவை தோற்றுவோர்க்கு புதிய முறை வினாத்தாள்

## - வலது குறைந்தோருக்கு விசேட ஏற்பாடு -

(கொழும்பு)

நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ள க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு கடந்த காலங்களை விட வித்தியாசமான வகையில் வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாணவர்களின் ஞாபக சக்தியை முக்கியமாகக் கொண்டே இது கால வரை வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டன. ஆனால், இம்முறை ஏனைய நாடுகளில் பின்பற்றப் படுவதற்கு அமைய விவேகம், தர்க்கிக்கும் திறன், சிந்தனா சக்தி, இன்றைய தேவை ஆகிய விடயங்ளைக் கவனத்தில் கொண்டு அதற்கு ஏற்றவாறு வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வினாத்தாள்கள் மேற்படி பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றும் புதிய பரீட்சார்த்திகளுக்கு மட்டுமே வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே தோற்றி மீண்டும் இம்முறை பரீட்சை எழுதவுள்ள பழைய தனிப்பட்ட மற்றும் பாடசாலை பரீட்சார்த்திகளுக்கு முன்னைய முறையில் வேறு வினாத்தாள்கள் வழங்கப் படவுள்ளன.

அத்துடன் வலது குறைந்த பரீட்சார்த்திகளுக்கு விசேட சலுகைகளை வழங்க பரீட்சைத் திணைக்களம் முன்வந்துள்ளது. விசேட இருக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கென விசேட மேற் பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பரீட்சை எழுதுவதற்கு மேலதிக நேரமும் ஒதுக்கப்பட்டுள்ளது. விசேட உதவிகள், சலுகைகள் கோரி வலது குறைந்த சுமார் 200 பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## கோலாலம்பூரில் ஏற்பட்ட மண் சரிவில் இலங்கைப் பணிப்பெண் பலி

கோலலாம்பூரில் ஏற்பட்ட மண் சரிவில் இலங்கைப் பணிப்பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.என்.யோகேஸ்வரி என்ற மிருக வைத்தியரிடம் பணிப் பெண்ணாக கடமையாற்றிய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மீட்புப் பணியாளர்களினால் முதலில் நடத்திய சோதனைகள் வெற்றியளிக்கவில்லை எனவும் பின்னர் மீண்டும் மேற்கொண்ட தேடுதலின் போது குறித்த நான்கு பேரின் சடலங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இந்த மண்சரிவு சம்பவத்தில் டாக்டர் யோகேஸ்வரியும் உயிரிழந்துள்ளார். இலங்கைப் பெண்ணின் சடலம் இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-5)

## டிசம்பருக்குள் கல்வி நிருவாக சேவை நியமனங்கள் வழங்கப்படும்

### கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் மொகமட்தம்பி

(கொழும்பு)

இலங்கை கல்வி நிருவாக சேவை (SLEAS) நியமனங்கள் யாவும் பெரும்பாலும் இம்மாத முடிவிற்குள் வழங்கப்பட்டு விடுமென கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் ஜே.மொகமட்தம்பி தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஏற்கனவே நடைபெற்று முடிந்திருக்கின்ற திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றோருக்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றியோருக்கான நியமனங்களே இவ்விதம் டிசம்பருக்குள் வழங்கப்படவுள்ளன.

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் தயார்படுத்தப்பட்டு வருகின்றன. அதே வேளை பயிற்சி வழங்குவ்தற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (ஓ-6)

## இராசி பலன்

10.12.2008
(கார்த்திகை 25, புதன்கிழமை)
பரணி முன்னிரவு 8.21 மணிவரை
திரயோதசி பின்னிரவு 3.54 மணிவரை
இராகுகாலம் 12.19- 1.49 மணிவரை
சுபநேரம் 4.49- 6.19 மணிவரை
பிரதோஷ விரதம்

| | |
|---|---|
| மேடம் | கடினவார்த்தை, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு ,குடும்பக் கவலை. |
| இடபம் | புதிய முயற்சி, திடீர் நன்மை, தெய்வசிந்தை, நல்லவரவேற்பு. |
| மிதுனம் | அதிகாரிகள் சந்திப்பு, சுபசெலவு, முயற்சி கைகூடும், பிரயாணம் |
| கடகம் | சகோதரர் உதவி, கீர்த்தி, காரிய அனுகூலம், தெய்வ நம்பிக்கை. |
| சிங்கம் | உற்சாகம், எடுத்தகாரியம், கைகூடும், மேன்மை, பிறர் உதவி |
| கன்னி | கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம், பெரியோர் உதவி. |
| துலாம் | மனச்சஞ்சலம், தேவையற்ற பிரச்சினை, ஆரோக்கியக் குறைவு, திடீர் நன்மை. |
| விருச்சிகம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, உறவினர் வருகை, காரிய அனுகூலம், போசன சுகம் |
| தனுசு | மனமகிழ்ச்சி, நல்ல காரியம், அதிகாரம், போசன சுகம் |
| மகரம் | புத்திரரால் கவலை, காரிய தாமதம், திடீர் நன்மை, ரோக நிலை |
| கும்பம் | சுபசெலவு, காரிய இடையூறு, புதிய விடயம், நண்பர்கள் சந்திப்பு |
| மீனம் | செய்தொழில் விருத்தி, காரிய நன்மை, பிறர் உதவி, குடும்ப சுகம். |

வளவன்

## வீரச் செயல்களுக்கு விருது வழங்குவதற்கான விண்ணப்பங் கோரல்

(கொழும்பு)

குடிமக்கள் வீரச்செயல்களுக்கான மன்றம் இந்த ஆண்டும் வீரச்செயல்களுக்கான விருதுகளை வழங்க இருக்கிறது. 2009 ஆம் ஆண்டின் விருதுகளுக்கான விண்ணபப்படிவங்களை சங்கமானது தற்போது இலங்கை வாழ் மக்களிடமிருந்து ஏற்றுக் கொள்ள இருக்கிறது. விண்ணப்பதாரிகள் கீழ் காணும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

குடிமக்களின் வீரச்செயல்களுக்கான விருதானது வெள்ளம், தீ, சுரங்க விபத்துக்கள், இயற்கை அனர்த்தங்கள், மனிதனால் ஏற்படுத்தப்படும் அழிவுகள் ஆகியவற்றின் போது தானாகவே முன்வந்து தமக்கு அதன் விளைவாக ஏற்படக்கூடிய உடற்காயங்களையோ உயிர் இழைப்பையோ பொருட்படுத்தாமல் பிறர் உயிரைக் காப்பாற்றுபவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த விருதானது படல் நா (Budal Na) தங்கப் பதக்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைக் கொண்டதாகும்.

விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் தகுதி வாய்ந்த நீதிபதிகள் குழுவானது தாம் நடத்திய நேர்முகத் தேர்வு மற்றும் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் விருதுக்கான பெயர்களைத் தெரிவு செய்யும்.

விருது பெறுவதற்கு விண்ணப்பிப்போர் 2008 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் வீரச்செயல்களை ஆற்றியிருக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை வீரச்செயலைப் புரிந்தவர் அல்லது வீரச்செயலை ஆற்றியது பற்றி அறிந்தவர்கள் சமர்ப்பிக்கலாம்.

சம்பவம் நடந்ததை நிரூபிப்பதற்கான தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டியது விண்ணப்பதாரியினதும் வீரச் செயல் புரிந்தவரதும் பொறுப்பாகும்.

முன்பு ஒரு முறை பதக்கம் பெற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க முடியாது.

விருதாகப் பதக்கம் மட்டுமே வழங்கப்படும். விருது பெறுபவர்களுக்கு எவ்வித நிதிச் சலுகைகளும் மன்றத்தால் வழங்கப் பட மாட்டாது.

தெரிவு செய்வதற்கான நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

விண்ணப்பங்களை 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் குசும் பி. சந்த்ர ரத்ன தலைவர் - குடிமக்கள் வீரச்செயல்களுக்கான மன்றம்

137 ஏ, சிறி சித்தாத்தராம வீதி,

வலானா பாணந்துறை. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் அல்லது தொலைபேசி :- குறுங்செய்தி (SMS) 0385670050

மின்னஞ்சல்: info@civilianbravery. org.

இணையத்தளம்: www.civilianbravery. org. (ஓ-5)

## போயா ஆன்மீக நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை அதிகாலை 5மணிக்கு போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நகர சங்கீர்த்தனத் துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

அன்று ஓம்காரம், காயத்திரி மந்திர ஜெபம்,வேதபாராயணம், நாம அருட்சனை, திருநீற்றுப் பதிகம்,கோளாறு பதிகம்,பஜனை, சொற்பொழிவு ஆகியன இடம்பெறும். ஓ

## திருக்கார்த்திகை உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் திருக் கார்த்திகை விஸ்ணு ஆலய தீபம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று பிற்பகல் 3.30க்கு சங்கல்பத் துடன் ஆரம்பித்து அபிஷேக ஆராதனை களைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி, வெளி வீதி வலம்வருவார்.அதனைத் தொடர்ந்து சொக்கப்பனை எரித்து சோதிவடிவைக் காட்டுதலுடன் விஸ்ணு ஆலய தீபம் நிறை வடையும். (ஓ-36)

## சைவப்புலவர் சங்க பரீட்சை முடிவுகள்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தினால் இவ்வருடம் நடாத்தப்பட்ட சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுகளில் சித்தியடைந்தோர் பற்றிய விபரங்கள் வெளி யிடப்பட்டுள்ளது.

2009 ஆம் வருடத்துக்கான தேர்வு ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ளதாகவும் அதற் கான விண்ணப்பங்கள் பெப்ரவரி வரை ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை அறிவித் துள்ளார்.

சித்தியடைந்தோர் விபரம் வருமாறு,

**இளஞ்சைவப் புலவர் தேர்வு**

வை.கோகுலன்-ஜெர்மனி, த.வினோ-சாவகச்சேரி, செ.மல்லிகாதேவி- வட்டுக் கோட்டை ஆகியோர் இரண்டாம் வகுப்பிலும், த.ஜெயப்பிரியா -அளவெட்டி, வி.கோமளேஸ் வரி- மாதகல் ஆகியோர் 3ஆம் வகுப்பிலும் சித்தியடைந்துள்ளனர்.

**சைவப்வுலவர் தேர்வு**

சி.தங்கரெத்தினராசா-ஜெர்மனி, சி.இராதாகிருஷ்ணன்-கண்டி ஆகியோர் 2ஆம் வகுப்பிலும் அ.அரண்மகன் - கொழும்பு,வை.தேவகி-கட்டப்பிராய், மா.கண நாதன் -வட்டுக்கோட்டை ஆகியோர் 3ஆம் வகுப் பிலும் சித்தியடைந்துள்ளனர். ஓ

## வேதாந்தமடத்தில் 'திருமந்திரம்' விரிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்தமடம் என அழைக் கப்படும் ஸ்ரீசிவகுருநாத குரு பீடத்தில் மாதம் தோறும் பூரணை தினங்களில் இடம்பெறும் திருமூலர் திருமந்திரம் விரிவுரையை எதிர் வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் வழங் கவுள்ளார். ஓ

# அனர்த்த சூழ்நிலையால் ஆதன வரியில் வீழ்ச்சி

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

இரு தசாப்தங்களுக்கு மேலாக நீடித்து இருக்கும் அனர்த்த சூழ்நிலையாலும், மக்களின் இடப்பெயர்வு காரணமாகவும் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதாலும் பிரதேச சபைகளின் முக்கிய வருமானமான ஆதனவரியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள் ளது. பல இலட்சம் ரூபா மக்களிடம் இருந்து அறவிடப்படாமல் நிலுவையாக இருக்கின் றது. நல்லமுறையில் இயங்கி வந்த சந்தை களின் வருமானத்தில் பாரிய பாதிப்பு ஏற்பட் டுள்ளது.இதனால் பிரதேசத்தின் அபிவிருத் திப் பணிகள் முழுமையடையாமல் இருப்பது டன் மக்களின் தேவைகளையும் நிறை வேற்ற முடியாமல் இருக்கின்றது.

இவ்வாறு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி பெரும் விழாவுக்கு தலைமை தாங்கிய பிரதேசசபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித் தார்.

மானிப்பாய் கலாசார மண்டபத்தில் நடை பெற்ற இவ்விழாவில் செயலாளர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது,

பிரதேச சபைகள் அரசாங்கத் திணைக் களம் போலல்லாமல் மக்களிடமிருந்து அறவிடப்படும் வரிப் பணத்தை மீண்டும் அவர்களின் அபிவிருத்திக்காக செலவு செய்து வருகின்றது. உள்ளூராட்சி சமாதா னத்தின் வாசல் என்னும் தொனிப் பொரு ளுக்கமைய உள்ளூராட்சி வாரச் செயற்பாடு கள் மக்களுடன் இணைந்து முன்னெடுக்கப் பட்டுள்ளன.

55.238 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்ட எமது பிரதேசத்தில் மக்களின் வாழ்வாதாரத் தொழிலாக விவசாயம், மீன் பிடி காணப்படுகின்றது.

வடக்கே மாதகல் கடல் எல்லையும் தென்மேற்கே காக்கை தீவு கடல் எல்லையும் கொண்ட பிரதேசமாகும்.

சூழல் பாதுகாப்பு திண்மக் கழிவு முகா மைத்துவம் தொடர்பாக பாடசாலை மாண வர்கள், பொதுமக்கள் மத்தியில் விழிப் புணர்வை ஏற்படுத்தும் வகையில் செயற் பாடுகள் அமைந்துள்ளன. நாட்டு நிலைமை காரணமாக பெரும்பாலான வீதிகள் புனர மைக்கப்படாமல் இருக்கின்றன. ஒரு கிலோ மீற்றர் தார் வீதியைப் புனரமைக்க 22 இலட் சம் ரூபா செலவாகிறது. இந்த நிலை மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி யுள்ளது.

பிரதேசத்தின் எல்லைகளில் பெரும் பகுதி கடற்பிரதேசமாகக் காணப்படுவதால் நன்னீர் வளம் குறைந்து மக்களின் குடிநீர்ப் பிரச் சினை அதிகரித்துள்ளது. வாகன வசதியின்மை மற்றும் நிதிப் பற்றாக்குறையால் இதற்குத் தீர்வுகாண முடியாமல் இருக்கின்றது. பிரதே சத்தின் வடிகால் அமைப்பு திட்டமிடப்படாத முறையில் காணப்படுவதால் மாரி காலங் களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். (ஓ-5)

## தொல்லை கொடுத்த குரங்கை இனத்துடன் இணைத்த ஊழியர்கள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதிகளில் பல மாதங் களாக தொல்லை கொடுத்து வந்த குரங்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நலன்புரி சங்க ஊழியர்களால் பிடிக்கப்பட்டு தென்மராட்சிப் பகுதியில் விடப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பகுதியில் தனியாக வசித்து வந்த குரங்கு ஒன்று வீடுகள், வைத் தியசாலை, நீதிமன்றங்களுக்குள் சென்று தனக்குத் தேவையான உணவுகளை எடுத் துச் செல்வதும் உணவு கிடைக்காதுவிடின் அங்குள்ளவர்களுக்கு தொந்தரவு கொடுப் பதுமாக இருந்து வந்துள்ளது.

பருத்தித்துறை வைத்தியசாலைக்கு வரும் இக்குரங்கு நோயாளர் விடுதிகளுக்கு சென்று நோயாளர்களின் உணவுகளை பறித்தெடுப் பதும் நோயாளர்களுக்கு தொல்லை கொடுப் பதுமாக இருந்தது. ஒரு தடவை பருத்தித் துறை நீதிமன்றுக்குள் சென்று அங்கி ருந்த நீதிமன்றப் பதிவுகளை சேதப்படுத்தியுள்ளது. இதுதொடர்பில் நீதிவானுக்கு தெரியப்படுத் தவே நீதிவான் பொலிஸாருக்கு குரங்கை சுடுவதற்கான உத்தரவை வழங்கியுள்ளார்.

பொலிஸாரும் இக் குரங்கை பல தடவை சுட முயன்றும் குரங்கு தப்பிக்கொண்டது.

இந்நிலையில், குரங்கு வைத்திய சாலைக்கு ஒருநாள் வந்தபோது வைத்திய சாலை நலன் புரிச் சங்க ஊழியர்களால் இரும்புக்கூடு உருவாக்கப்பட்டு உண வினை அக்கூட்டுக்குள் போட்டு ஒரு வழி யாக அதனைப் பிடித்து அம்புலன்ஸ் வண்டி மூலம் தென்மராட்சி வரணிப் பகுதிக்குக் கொண்டு சென்று ஏனைய குரங்குகளுடன் இணைத்துவிட்டனர். (ஓ-6)

## பாம்புக் கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

முருகன் லேன் திருநெல்வேலியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான கந்தையா இராசதுரை (வயது 50) என்பவரே இவ்விதம் மரணமடைந்துள்ளதாகத் தெரி யப்படுகின்றது.

மேலும் சம்பவம் பற்றி விசாரித்ததில் கடந்த திங்கட்கிழமை இரவு 7.45 மணி யளவில் பாம்பு கடித்ததாகவும் உடனடி யாக அன்று இரவு 8.15மணியளவில யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார் எனவும்,

எனினும், மறுநாள் காலை 8.30மணிய ளவில் சிகிச்சை பயனளிக்காமல் மரணம டைந்துள்ளார் என வைத்தியசாலை வட்டா ரங்கள் அறிவித்துள்ளன. ஓ





வண்ணை வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு சித்திரத் தேர் அமைக்கும் பணியின் ஆரம்ப விழாவில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தேங்காய் உடைத்து ஆரம்பித்து வைப்பதையும்,திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தைச் சேர்ந்த ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஷ் வேலையை ஆரம்பிப்பதையும், இவ் வைபவத்தில் தலைமை வகித்த பிரதேச செயலர் மு.நந்தகோபன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## வீழ்ந்த மரத்தை அகற்றி போக்குவரத்துக்கு உதவுக

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அரசடி பிள்ளை யார் கோவிலடியில் நின்ற அரசமரம் அண்மையில் பெய்த கன மழை காரணமாக வீதியின் குறுக்கே பாறி வீழ்ந்துள்ளது. இதனால் வீதிப் போக்குவரத்து பாதிப்படைந் துள்ளது.

மாற்றுவழிப் பாதையும், சேறும் சகதியுமாக காணப்படுவதனால் கோண்டா வில் அரச உணவு களஞ்சியத்திற்கு சென்று வரும் லொறிகள் உட்பட அனைத்து வாக னங்களும் பெரும் சிரமத்திற்கு உள்ளா கின்றன.


எத்தனையோ பேருக்கு ஆறுதல் தந்த அரச மரத்தை சீரான கால நிலை நிலவும் காலப் பகுதிகளில் உடனடியாக அகற்றி போக்குவரத்திற்கு உதவுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஓ-36)

## கைத்தொழில் கல்விக் கண்காட்சியும் வர்த்தகச் சந்தையும்

(யாழ்ப்பாணம்)

யாழ் வணிகர் கழகத்தினால் இம் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை கைத்தொழில் கல்விக் கண்காட்சியும் வர்த்தகச் சந்தையும் யாழ் மத்திய கல்லூரி யிலும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இக் கண்காட் சியிலும் வர்த்தகச் சந்தை யிலும் பங்குபற்ற விரும்புவர்கள் இல. 165 மானிப்பாய் வீதியில் உள்ள யாழ்.வணிகர் கழகத்துடன் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக் கிழமைக்கு முன் தொடர்புகொள்ளும்படி யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொண் டுள்ளது. ஓ




## ஐயப்பன் கோவிலில் 18 படியேறும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சபரீச ஐயப்பன் கோவி லில் இம்மாதம் 25 ஆம் திகதி இருமுடிக் கான நெய்த் தேங்காய்க்கு நெய் நிரப்பும் நிகழ்வும், 26ஆம் திகதி ஐயப்பன் கோவில் 18 படிகளில் படியேறும் வைபவ மும் 27ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு நெய் அபிஷே கமும் நடைபெறும்.

ஐயப்ப அடியார்கள் அனைவரையும் ஆலயத்திற்கு வந்து தங்களது பெயர்களைப் பதிவுசெய்து நெய்த் தேங்காய் நெய் நிரப்பி இரு முடிகட்டி 18 படியேறும் வண்ணம் ஆலய குருசாமியும் ஐயப்ப அடியார்களும் கேட்டுள்ளனர். ஓ

## குணமாக்கல் வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் இறைதியான குணமாக்கல் வழிபாடுகள் நடத்தி மக்களின் துயர் துடைக்கும் நோக் குடன் மட்டக்களப்பு தேற்றாத் தீவில் இறை பணி புரிந்து வரும் அருட்பணியாளர் போல் றொபின்சன் அடிகளார் எதிர்வரும் சனிக் கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாக யாழ்.ஆயர் இல்லம் தெரி வித்துள்ளது.

அடிகளார் சனி மாலை 3 மணிக்கு கோப் பாயிலும் ஞாயிறு காலை 9மணிக்கு யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியிலும், திங்கட் கிழமை காலை 9மணிக்கு யாழ்.இறை தியான இல்லத்திலும் அன்று மாலை 3 மணிக்கு கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலயத்திலும் 16ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு பண்டத்தரிப்பு பற்றிமாதா ஆலயத்திலும் அன்று மாலை 3 மணிக்கு பருத்தித்துறை மறைக் கோட்டத் திலும் இறைதியான குணமாக்கல் வழிபாடு களை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. ஓ

# இலங்கையில் தமிழர் 7

அம் முயற்சியில் “கடந்த கால நிலை” (The Past ) இன்றியமையாத ஒன்றாகக் கருதப்பட்டது. கடந்த காலத்தில், அதாவது காலனித்துவ ஆட்சிக்கு முன், தம் இனக்குழு கூடுதலான உரிமையுள்ள குழுவாக இருந்தது என்பதை எடுத்துக்காட்டி, அந் நிலைக்கு ஏற்ப கூடுதலான உரிமைகளை எதிர்காலத்திலும் பெறுவதற்கு ஆளும் காலனித்துவ அரசுக்கு கோரிக்கை விடுவது அவசியமானதாக ஒவ்வொரு இனக்குழுவும் கருதியது.

நாட்டில் பல இனக்குழுக்கள் இருந்தன. அவற்றுள் எது நாட்டில் முதல் குடியேறியதோ அதுவே கூடுதலான உரிமை கோரக் கூடியது என்ற எண்ணத்தின் அடிப்படையில் ‘கடந்த கால நிலை’ காலனித்துவ ஆட்சியாளரிடமிருந்து உரிமை கோருவதற்கு முக்கிய விவாதப் பொருளாக மாறியது.

இத்தகைய விவாதங்களில் வழமையாகக் காணப்படுவது போலவே, இலங்கைத் தேசியத் தலைவர்களுக்கு இடையில் தோன்றிய விவாதத்திற்கும் தொல்லியல், மொழியில் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் தேவைப்பட்டன. இத்தகைய சான்றுகளைத் தம் தேவைகளுக்கு ஏற்பப் பயன்படுத்திய சிலர் தாம் எழுதிய வரலாற்றில் இனப் பக்கச் சார்பினை மிகவும் வெளிப்படையாகக் காட்டியுள்ளனர்.

இலங்கை பிரித்தானியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற பின்னரும் இத்தகைய போக்கு மேலும் வளர்ந்து சென்று, இன நெருக்கடி ஏற்படத் தொடங்கிய காலத்தில் இனவாதக் கருத்துக்கள் சீரற்ற முறையில் வெளிப்படுத்தப்பட்டன. இந்த நிலை இலங்கையின் பல்கலைக்கழகங்களில் பரவியதைக் கண்டு கவலையுற்ற பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தன பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இரண்டு முக்கிய இனங்களுக்கும் இடையில் எழுந்த போராட்டம் உக்கிர நிலையை அடைய, நாட்டின் அறிஞர் சமூகமும் அதனால் பாதிக்கப்பட்டுப் பிளவுபடத் தொடங்கியது.

இப் போராட்டத்தில் அறிஞர்கள் பங்கு பற்ற வேண்டும், கடந்த கால நிலையைத் தமது இனக் குழுவின் கோரிக்கைகளை நியாயப்படுத்தும் வகையில் விளக்க வேண்டும் என்று கருதும் நிலைக்கு இரு தரப்பு அறிஞர்களும் தள்ளப்பட்டனர். எதிர் தரப்பினர் முன்வைக்கும் கருத்துக்களைத் தப்பானவை என்று காட்ட வேண்டிய பொறுப்பும் இவர்கள் மீது சுமத்தப்பட்டது. இதனால் ஓர் குழுவைச் சேர்ந்த அறிஞர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு அதே இனக் குழுவைச் சேர்ந்த எவராவது கண்டனம் தெரிவிப்பது ஆபத்தான செயலாகிறது. இதன் விளைவாக அறிஞர் சிலரது ஆய்வுகள் தரமிழக்கத் தொடங்கின.

இனக் குழுப் போராட்டம் இலங்கையில் அறிஞர் ஆய்வுகளைப் பாதித்தது என்பதில் ஐயமில்லை. இலங்கை வரலாறு பற்றி அண்மைக் காலத்தில் எழுதப்பட்ட நூல்களையும் கட்டுரைகளையும் நடுநின்று சீர்தூக்கிப் பார்க்கும் எவருக்கும் ஓர் உண்மை புலப்படும்.

இனக்குழுப் போராட்டத்தின் விளைவாய்ப் போலி வரலாற்றறிஞர்கள் தோன்றிப் பேராதனை அறிஞர் குழு வரலாற்றாய்வுக்கு வகுத்த நெறியைத் திசை திருப்ப முனைந்துள்ளனர் என்பதே அந்த உண்மை. இப்படியான நிலை இதுபோன்ற கால கட்டங்களில் வேறு நாடுகளிலும் காணப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் தேசியவாத இயக்கங்கள் பரவியபோது தாம் வாழும் நிலப்பகுதி தமதாகவே என்றென்றும் இருந்தது என்று நிறுவ விரும்பிய ஒவ்வொரு இனக் குழுவும் வரலாற்றையும் தொல்லியலையும் தம் தேவைக்குப் பயன்படுத்தியது. இதுபற்றி வரலாற்றாசிரியர் நோர்மன் டேவிஸ் கூறியது கவனிக்கத்தக்கது.

தாம் வாழும் நிலத்தை தாமும் தம் முன்னோரும் என்றென்றும் தம் சொத்தாகக் கொண்டிருந்தனர் என்று தற்கால தேசிய இனங்களும் ஆட்சியாளர்களும் எண்ணுகிறார்கள். ‘மண்ணுக்கும் இரத்தத்துக்கும்’ உள்ள உறவு பிரிக்கமுடியாதது என்ற நம்பிக்கை 19ஆம் நூற்றாண்டு தேசியவாதத்திற்கு வலுவூட்டிய சக்தி மிகு மன இயந்திரமாக அமைந்தது.

இன்று தம் தேசிய எல்லைக்குள் அடங்கும் ஒவ்வொரு சாண் நிலமும் என்றென்றும் தமதாகவே இருந்தது; ஆகவே அந் நிலம் தாம் உரிமையாகப் பெற்ற பிரெஞ்சு நிலம் அல்லது ஜேர்மன் நிலம் அல்லது போலந்து நிலம் என்றெல்லாம் ஐரோப்பியர் உரிமை பேசுவர். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றிய ஆய்வுகளும் தொல்லியல் ஆய்வுகளும் நெருக்கடியான அரசியல் சூழலில் வளர்ந்துள்ளன. இந்த ஆய்வுகளில் வெளித் தோற்றத்திற்கு தேசியவாதம் தென்படாது இருந்தாலும் உள்ளே அது செயற்பட்டுக் கொண்டிருந்தது.

தற்கால அரசியல் நோக்கங்களுக்கு பொருத்தமற்றவையாக காணப்பட்டவற்றை நீக்கி, தற்காலத்தவர் தமது வரலாறு என்று உறவு பேசக் கூடிய வகையில் ‘ஒரு கடந்த காலத்தை கண்டுபிடிக்க பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு காலத்திலும் எழுதப்படும் வரலாறு அவ்வக் காலத்து அரசியலால் பாதிக்கப்படுகின்றது. இக்கால அரசியல் இக்காலத்தில் எழுதப்படும் வரலாற்றில் தாக்கமேற்படுத்துவது எல்லா நாடுகளிலும் காணப்படும் ஒரு நிலையாகும். இன்றைய இனக்குழு முரண்பாட்டால் எழும் அரசியல் பிரச்சினைகள் விவாதிக்கப்படும் போது வரலாற்றுச் சான்றுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதனால் பொதுவாக எல்லோருமே வரலாற்று விஷயங்களில் அக்கறை கொள்கின்றனர்.

இதேபோன்று இக்காலத்தில் தொல்லியல் சாா்ந்த விஷயங்களிலும் பெரும்பாலோா் கவனம் செலுத்துகின்றனர். அவரவர் தேவைக்கேற்ப வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும் தொல்லியல் சான்றுகளுக்கும் ஒவ்வொருவரும் விளக்கம் கொடுப்பது வழக்கமாகிவிட்டது. இந்நிலை, வரலாற்றாய்வாளர்கள்” மீது தொல்லியலாளர் மீதும் முன் காணப்படாத அளவுக்கு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அரசியலின் தேவைகளை நியாயப்படுத்தக் கூடிய வகையில் தாம் செயற்படவேண்டும் என்ற நிலைக்கு இந்த ஆய்வாளர்கள் தள்ளப்படுகின்றனர்.

பிற அறிவியல் துறைகளில் ஆய்வு செய்வோர் போன்று, வரலாற்றியலிலும் ,தொல்லியலிலும் அறிஞர்களாக செயற்படுவோர் நடுநிலை தவறாது, எவ்வகையான பக்கச் சார்புகளுக்கும் இடமளிக்காது சான்றுகளின் அடிப்படையில் கருத்துரைகளை வழங்குவது அவசியமாகும். வரலாற்றுச் சான்றுகளை கட்டுக் கதைகளிலிருந்து வேறுபடுத்தி, வரலாற்றைத் தவறாக அரசியலுக்கு பயன்படுத்தும் போக்கினைக் கண்டித்து, அறிவியல் முறைப்படி வரலாற்றியலை மேலும் வளர்ப்பது வரலாற்றாசிரியர்களாக பொறுப்பேற்பவர்களுடைய தலையாய கடமையாகும்.

### யார் முதலில் வந்தது?

சமகால அரசியல் பிரச்சினைகள் எவ்வாறு வரலாற்றுக் கருத்துக்களை பாதிக்கின்றன என்பதற்கு இலங்கையைப் பொறுத்தவரை ஒரு நல்ல எடுத்துக்காட்டு, ‘யார் இந்த தீவில் முதலில் வந்து குடியேறியவர்கள்’ என்ற கேள்வி தொடர்பான பிரச்சினையாகும்.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

பல்லாயிரமாண்டுகளாக மனிதக் குழுக்கள் இந் நிலப் பகுதிக்கு வந்து, பல இனக் குழுக்கள் கலந்து, மிகவும் பிற்பட்ட கட்டத்தில் தற்காலத்து இனக்குழுக்கள் தோற்றம் பெற்ற வரலாற்றில், யார் முதலில் வந்தது என்று கேட்பது அர்த்தமற்றது.

இப்படியான ஒரு விவாதம் இன்றைய அரசியல் நோக்கங்களுக்காக இந்தியாவிலும் எழுந்துள்ளது. இதனையிட்டு, பிரபல இந்திய வரலாற்றாசிரியராகிய பேராசிரியர் ரோமீலா தாபர் தெரிவித்துள்ள கருத்தை இங்கு குறிப்பிடலாம்.

‘இந்திய வரலாற்றின் தொடக்கம் பற்றி தற்பொழுது நடைபெறும் கருத்துப் பரிமாறல்களில் தொல்லியலும் மொழியியலும் சம்பந்தப்பட்டுள்ளன. இந்திய மண்ணுக்கே உரிய சுதேசி மக்களை அன்னியரிலிருந்து வேறுபடுத்தும் முயற்சியும் இதில் அடங்கும்.

மனித சமூகங்கள் மற்றும் அச் சமூகங்களை வேறுபடுத்தும் அடையாளங்கள் நிரந்தரமாகவோ மாற்றமின்றியோ நிலைப்பவை அல்ல என்பது வரலாறு காட்டும் உண்மை. (தொடரும்)

# சமூக நிறுவனங்களுக்கான நிர்வாகமும் முகாமைத்துவமும்

**அலுவலக நேரம் (Office Hours)**

சமூக மட்ட நிறுவனங்களில் காரியாலயம் சமூக மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே அமைக்கப்பட்டுள்ளது. எனவே காரியாலயத்திற்கு வந்துபோகும் வாடிக்கையாளர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் வசதியான வகையில் காரியாலய செயற்பாடுகள் திட்டமிடப்பட வேண்டும்.



காரியாலயம் திறக்கப்படும் நேரம், மூடப்படும் நேரம் செயற்குழுவினால் நிச்சயிக்கப்பட்டு அதன்படி தொழிற்பட வேண்டும். இது அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உ+ம்:-மாலை 3.00மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை

இதேபோல் அலுவலகம் முற்றாக மூடப்படும் நாட்கள் முற்கூட்டியே திட்டமிடப்பட்டு குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட வேண்டும். அவசர தேவைகளுக்கான மாற்று நடவடிக்கைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும். உதாரணமாக நியமிக்கப்பட்ட உறுப்பினர் வெளியூர் செல்லும் சந்தர்ப்பங்களில் அலுவலக வேலைகளை செய்வது யார் எனத் தீர்மானிக்கப்பட்டிருத்தல் நல்லது.

அத்துடன் சேமிப்புக்கடன் குழுவின் செயற் திட்ட இலக்குகளை அடைய தேவையான உதவிகளை வழங்கக்கூடியதாக காரியாலய கட்டமைப்பில் திட்டமிட்டிருத்தல் வேண்டும்.

உ+ம்:- *கூட்டம் நடாத்துதல், அதற்குரிய அறிக்கை தயாரித்தல் , மாதாந்த அறிக்கையைத் தயாரித்தல்.*

**கூட்டங்களை நடாத்துதலும் அறிக்கைகள் பேணுதலும்**

அமைப்பின் வளர்ச்சி, அங்கத்தவர் அதிகரிப்பு, நடை முறைப்படுத்தப்பட்ட தீர்வுகள், ஏற்பட்ட பிரச்சினைகள் , எதிர்கால திட்டங்கள் என்பன பற்றி கலந்துரையாடவும், அங்கத்தவர் அளித்த தரவும், அமைப்பின் வெளிப்படைத் தன்மையைப் பேணவும் கூட்டங்கள் கட்டாயம் நடாத்தப்பட வேண்டும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இக் கூட்டங்கள் நடைபெறுவதை உறுதிசெய்ய வேண்டும்.

இக் கூட்டங்கள் நடாத்தப்படுவதற்குரிய நிகழ்ச்சி நிரல்களை தயாரித்து இருப்பதுடன் அதன் படி கூட்டங்கள் நடாத்த உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் இக் கூட்டங்கள் அதில் பங்குபற்றுபவர்களுக்கு வசதியான இடத்தில், வசதியான நேரத்தில் நடாத்தப்படுவது நல்லது.

உ+ம்:- *விழிப்புணர்வுக் கூட்டம்-கோவில் போன்ற பொது இடங்களில்*

*செயற்குழுக் கூட்டம் - காரியாலயத்தில் அல்லது ஒருவரின் வீட்டில்*

*பொதுக்கூட்டம்- பாடசாலையில் அல்லது கோவில் மண்டபத்தில்*

இதேபோல் கூட்டங்கள் தொடங்கும் நேரம், கூட்டங்களுக்கு எவ்வளவு நேரம் தேவைப்படும் என்பனவும் திட்டமிடப்பட வேண்டும்.

பின்வரும் கூட்டங்கள் ஒழுங்கு முறையாக நடாத்தப்பட வேண்டும்.

1. செயற்குழுக்கூட்டம்
2. பொதுச் சபைக் கூட்டம்
3. வருடாந்தப் பொதுக்கூட்டம்.

**செயற்குழுக் கூட்டம்**

இது குழுவின் செயற்பாடுகளை நிர்வாகக் குழுவினர் ஆழமாக ஆராய்ந்து எதிர்காலத்தை திட்டமிடுவதற்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்குமான ஒரு சந்தர்ப்பமாகும். அத்துடன் முக்கியமான முடிவுகள் எடுக்கப்படும் சந்தர்ப்பம் இதுவாகும்.எனவே இதற்கான நிகழ்ச்சி நிரலில் பின்வரும் விடயங்களைக் கட்டாயம் உள்ளடக்க வேண்டும்.

- கடந்த கூட்ட அறிக்கையை ஆராய்தல்
- கடந்த மாத வளர்ச்சியும் குறைபாடுகளும்.
- செய்திட்டத்துடனான ஒப்பீடு
- எதிர்காலத்திற்கான திட்டமிடல்
- ஏனைய பிரச்சனைகளும் தீர்வுகளும்.

14

**பொதுச் சபைக்கூட்டம்**

குழுவின் செயற்பாடுகளை நிர்வாகக் குழுவினரால் குழுவின் அங்கத்தவர்களுக்கு அறிவிக்கக் கூடிய சந்தர்ப்பம் இதுவாகும்.

மேலும் நிர்வாகக் குழுவினர் தமது சிபார்சுகளை சமர்ப்பித்து அவற்றை நடைமுறைப்படுத்து வதற்கான அங்கீகாரம் மற்றும் அனுமதி யினைப் பெறும் சந்தர்ப்பமும் இதுவாகும். அதேபோல அங்கத்தவர்களின் சந்தேகங் கள்,கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கவும் இது ஏற்ற சந்தர்ப்பமாகும்.

இக் கூட்டத்திற் கான நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்க வேண்டிய விடயங்கள்வருமாறு:

- கடந்த கூட்ட அறிக்கையை ஆராய்தல்.
- கடந்த கால வளர்ச்சி/ முன்னேற்றம்.
- மாதாந்த நிதியறிக்கை சமர்ப்பித்தல்.
- கடன் வழங்கல் தொடர்பான அனுமதி பெறல்.
- எதிர்கால திட்ட அறிவிப்பு.
- ஏனைய முக்கியமான அறிவித்தல்கள்.
- செயற்குழு தீர்மானங்களை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். (தொடரும்)

**தி.திருசாந்**
SOND நிறுவனம்
யாழ்ப்பாணம்

# போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

## 2009 ஆம் ஆண்டுக்கான

## பொருட்கள், சேவைகள் வழங்குனர்களை பதிவுசெய்தல்

யாழ்.போதனா வைத்தியசாலையில் 2009 ஆம் ஆண்டில் பொருட்கள், சேவைகள் வழங்குனர்களையும் பதிவு செய்வதற்கு பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், விற்பனை முகவர்கள், அரச நிறுவனங்கள், அரச சபைகள்,பதிவுசெய்யப்பட்ட வியாபாரஸ்தாபனங்கள், கூட்டுறவு சங்கங்கள் என்பனவற்றில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை பணிப்பாளர் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15.01.2009 அன்று முற்பகல் 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும்

*குறியீடு (A) பொருட்கள் வழங்குதல்*

*குறியீடு (B) சேவை வழங்குதல்*

*குறியீடு (C) வாகனச் சுத்திகரிப்பு*

வாகனத்திருத்தம் என்பவற்றின் கீழ்வரும் ஒவ்வொரு வகையானவற்றிற்கும் தனித்தனியான ஒவ்வொன்றுக்கு ரூ.100/- வீதம் எமது அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று எம்மால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.

பொருட்கள்,சேவைகள் வழங்குனர்கள் ஒருமாத கால கடன் அடிப்படையில் பொருட்களையும் சேவைகளையும் வழங்குதல் வேண்டும்.

கூறுவிலை அனுப்பும்போது பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்களும் சேவை வழங்குர்களும் தமது கூறுவிலைகளைக் கண்டிப்பாக குறிப்பிட வேண்டும். பணிப்பாளர் வெளியாரிடமிருந்தும் கூறுவிலை கூறுவதற்கு உரிமை கொண்டிருப்பார் என்பதும் அறிவிக்கப்படுகின்றது.

### (A) SUPPLIES

01.Stationery Items with local and imported computer stationery, printed computer stationery, photocopy paper, C.R.books, ball point pens, pencil, envelops,carbon papers,white papers. Staplers,correcting fluids,stencils,diskettes,magnetic tapes,computer materials including printer ribbons and paper,toner cartridges, glue cubes and liquid glue.
02. Furniture(Wooden)
03. Furniture (steel)
04. Mats/broom and Ekil brooms.
05. Coir mattress and rubber
06. All type of linen item, Mackintosh and clothing item, elastic and Nylon cords.
07. All aluminium items and household equipments.
08. Ceramics glassware items.
09. Paint, varnish and floor polish, surgical spirit and nail items.
10. Washing soda, cleaning detergents,Vim, harpic, Shaving blades and matches.
11.Building materials.
12. Spare parts of the all type of vehicles.
13. Plumbing items, P.V.C pipe & etc.
14. All type of batteries.
15. Leather and leather products.
16. Hardware items, pad lock, galvanized bucket and nails etc.
17. Electrical appliances, Air conditioners, Refrigerators, ceiling fans, pedestal fans & Bulbs etc.
18. All type of Rexene and polythene items.
19. Drugs and milk food items.
20. Rubber stamps.
21. Computer and related accessories.
22. Dressing.
23. Surgical consumables.
24. Surgical instruments.
25. Surgical equipments.
26. Dental consumables.
27. Laboratory equipments.
28. Carpentry Items (all type of wood, Planks etc)

### (B) SERVICES

01. Repair of steel furnitures.
02. Repair of wooden furnitures.
03. Repair of electrical appliances (Air conditioners, refrigerators, Deep freezers)
Repair and service of Type writers,Calculators roneo machine computer and printers
04. Printing (all type of forms).
05. Repair of surgical appliances, X-ray machine & all other hospital equipments.
06. Rewinding of electrical motors, fans etc.
07. All kind of mechanical equipment services, maintenance and repair.
08. Gas/ Oxygen equipment services and repair (gas burner & gas cooker).
09.Water pump sewerage machine repairs and maintenance
10. Repairs of water supply and Toilet pipes.
11. Disposal of hospital garbage.
12. Sewing works.
13. Supply of official identity card.
14. Repairs of Buildings.

### (C) VEHICLE REPAIRS & SERVICES.

01. Repairs, electrical works and cushion works of all type of vechicles.
02. Services of all type of vechicles.

**Dr.A.E.Gnanajothy.**
**Director,**
**Teaching Hospital, Jaffna.**

(C/1839)

# இந்தியத் தலைவர்களை திருப்பி அனுப்ப வேண்டும்

## ஜே.வி.பி. வலியுறுத்தல்

இந்தியா கோருவது போன்று யுத்த நிறுத்தத்திற்கு அரசாங்கம் ஒருபோதும் இணங்கக் கூடாது. இலங்கையில் யுத்த நிறுத்தம் குறித்துப் பேசுவதற்கு முகர்ஜி மட்டுமல்ல இந்தியாவின் எந்தத் தலைவர்கள் வந்தாலும் அவர்களை விமான நிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்ப வேண்டும் என்று ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். புலிகளை ஒழித்துக் கட்டுவதற்கு இந்த யுத்தம் தொடர வேண்டும் . புலிகளினால் தமிழ் மக்களுக்கு எத்தகைய விமோசனமோ, ஜனநாயகமோ ஏற்பட்டு விடாது என்றும் அவர் கூறினார். புறக்கோட்டையில் அமைந்துள்ள சோலிஸ் மண்டபத்தில் திங்கட்கிழமை முற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் . அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது,

எமது நாடு கடந்த மூன்று தசாப்த காலமாக பிரிவினை வாதத்திற்குள் சிக்குண்டு சின்னாபின்னமான நிலையில் காணப்படுகின்றது. இந்தியாவின் தலையீடும் இந்த நாடு பிரிவினை வாத பிரச்சினையை எதிர் நோக்க பிரதான காரணிகளில் ஒன்றாகும்.

ஒரு காலத்தில் நன்கு பலமான நிலையில் காணப்பட்ட புலிகள் அமைப்பு இன்று எமது இராணுவ வீரர்களது தியாகத்தினால் மிகவும் பலவீனப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. பிரபாகரனால் இனிமேல் ஒன்றுமே செய்யமுடியாது அவர் விரை விலேயே கைதுசெய்யப்படும் நிலை ஏற் படும்.

அண்மையில் புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் போர் நிறுத்தத்திற்கு தாம் தயார் எனவும் போர் நிறுத்தம் தேவை எனவும் அறிக்கை யொன்றை ஊடகமொன்றுக்கு வெளியிட்டிருந்தார். அதற்குக் காரணம் எமது இராணுவ வீரர்களின் யுத்த நடவடிக்கைகளை புலிகளால் எதிர்கொள்ள முடியாமையேயாகும். அந்த அளவுக்கு புலிகள் இப்போது சுக்கு நூறாகிப் போயுள்ளனர்.

கருணாநிதி உட்பட இந்தியத் தலைவர்கள் பலர் இலங்கையில் இடம் பெறும் யுத்தம் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டும் என இலங்கை அரசை வற்புறுத்தி வருகின்றனர்.

இந்தியா பொறுப்பேற்குமானால் இத்தகைய பேச்சுவார்த்தைக்கு நாமும் ஆதரவு வழங்கத் தயார் என அண்மையில் ஹெல உறுமயக் கட்சி கூறியுள்ளது. இது எமக்கு பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் யுத்த நிறுத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் எமது நாட்டுக்கு விஜயத்தினை மேற்கொள்வதாகவும் அதற்கு மஹிந்தவின் அரசும் தயார் எனவும் கூறப்படுகிறது.

இலங்கையில் யுத்த நிறுத்தத்தினை மேற்கொள்ளும்படி பேச்சு வார்த்தை நடத்த முகர்ஜி மட்டுமல்ல இந்தியாவின் எந்தத் தலைவர்கள் வந்தாலும் அதற்கு நாம் எமது எதிர்ப்பை வெளிப்படுத்துவோம் விமான நிலையத்தில் இருந்தே அவர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டும். இலங்கை அரசு இந்தியாவின் தாளத்திற்கு ஆடக்கூடாது.

எமது வீரர்கள் வெகுவிரைவில் இந்த நாட்டை முழுமையாக பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுத்து சமாதானத்தை ஏற்படுத்துவார்கள் அதற்கு முதற் புலிகள் ஒழித்துக் கட்டப்பட வேண்டும். அதற்கு இந்த யுத்தம் தொடரப்பட வேண்டும்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் சிங்களத் தமிழ் முஸ்லிம் மக்கள் ஐக்கியமாக வாழ வேண்டும் என்பதே எமது விருப்பு. பிரிவினை வாதிகளான புலிப் பயங்கரவாதிகள் மூலமாக தமிழ்மக்களுக்கு எந்தவிதமான விமோசனமோ ஜனநாயகமோ ஏற்பட்டுவிடாது. ஆகவே , இந்தியா கூறுவது போன்று யுத்த நிறுத்தத்திற்கு அரசு ஒருபோதும் இணங்கக்கூடாது என்று அரசாங்கத்திடம் கோருகின்றோம்.

இன்று புதன் கிழமை நாடளாவிய ரீதியில் இந்தியாவின் தலையீட்டுக்கு எதிராக நாம் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கவுள்ளோம் நாடு குறித்த பாரிய பொறுப்பு அரச கட்சிகளுக்கு மட்டுமன்றி ஊடகங்களுக்கும் உண்டு என்பதை ஊடகவியலாளர்கள் மறந்து போகக்கூடாது என்றார். (ஓ-5)

# தேர்தல்களில் போட்டியிட சட்ட சிக்கல் எதுவும் இல்லை

## -எஸ்.பி.திஸாநாயக்கா

தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பில் எவ்வித சட்ட சிக்கலும் தமக்கு இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்று தாம் சிறைக்குச் செல்லவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக தேர்தலில் போட்டியிட்டு எவ்வாறு வெற்றி பெறுவதென்பதனை தாம் வெளிப்படுத்த உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.கண்டியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பொன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்திற்கு தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் பிரசன்னமாகாத காரணத்தினாலேயே பாராளுமன்ற ஆசனம் ரத்துச் செய்யப் பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-5)

## புலமைப்பரிசில் பரீட்சையில்

# அதியுயர் புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு பாதுகாப்புப் படையினரின் அன்பளிப்பு

யாழ்.குடாநாட்டில் இவ் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 23 மாணவ மாணவிகளுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி கௌரவித்துள்ளதாகப் பலாலிப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம், யாழ்.பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின்போது பாடசாலை மாணவர்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்துப் பிரச்சினைகள் பற்றி தெரிவித்ததை அடுத்து மாவட்டத்திலுள்ள 14 பாடசாலைகளைச் சேர்ந்த 23 மாணவ-மாணவிகளுக்கு கொழும்பு றோட்டரிக் கழக அனுசரணையுடன் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

கடந்த 6 ஆம் திகதி காங்கேசன்துறையில் ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்வொன்றில் வைத்து யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதியால் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் இத் துவிச்சக்கரவண்டிகள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,16 பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ்மொழி மூலம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவன் டி.பாசுபதன் மற்றும் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலய மாணவி எஸ்.மயூரி உட்பட 23 மாணவர்கள், இராணுவ உயர் அதிகாரிகள், சிவில் இணைப்பதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-2)

# தீர்வு காணப்படாவிடின் தனி இறைமையுடன் தமிழர்கள் வாழ்வதை தவிர்க்க முடியாது

## சபையில் கூட்டமைப்பு எம்.பி.ஸ்ரீகாந்தா

(கொழும்பு)

தேசிய இனப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட.ாவிடின் சர்வதேச சட்டத்திற்கமைவாக தனி இறைமையுடன் தமிழர்கள் வாழ்வதை தவிர்க்க முடியாது என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகள் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே வைத்து விட்டு பேச்சுக்கு வரப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை நடை பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது ,

30 வருடங்களுக்கு மேல் 22 ஆயிரம் ஆண், பெண் போராளிகளை இழந்து விடுதலைப் போரில் நிற்கின்ற தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே வைத்து விட்டு பேச்சுக்கு வரமாட்டார்கள் என்று அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் நன்கு தெரியும் எனினும் , நயவஞ்சக இராஜதந்திர அப் பட்டமான மோசடியில் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது.

யுத்தத்தை முன்னெடுப்பதற்கான நய வஞ்சகமான திட்டத்தையே அரசாங்கம் முன்னெடுக்கின்றது. அரசாங்கத்திற்கு அரசியல் தீர்வை முன் வைக்க முடியாது . எனினும் , பயங்கரவாதத்தை அழித்து விட்டு துப்பாக்கி , பீரங்கி முனையில் தீர்வை திணிக்க முயற்சிக்கின்றது.

இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கான யோசனை அரசாங்கத்திடம் இருக்கின்றதா ? போரில் அரசாங்கத்தின் படைகள் வெற்றி பெற்றுள்ளன என்பதை மறக்கவில்லை. எனினும் , போர் முடியவில்லை புலிகளின் இறுதி சதுர அங்குல மண்ணையும் கைப் பற்றினால் கூட தமிழ் மக்களின் தேசிய எழுச்சி சிதைந்து விடாது இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடின் அடுத்தடுத்த தலை முறைகள் எழுந்து செயற்படுவார்கள். புலிகளின் யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும். அதற்கான நேசக்கரத்தை கூட்டமைப்பு நீட்டுகின்றது.

விடுதலைப்புலிகளை , புலிகளின் போராட்டத்தை நம்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புஅரசியலை ஆரம்பிக்கவில்லை. மாணவப் பருவம் , தந்தை செல்வாவின் கொள்கை மற்றும் உரிமை மறுக்கப்பட்டதன் பின்னர் இயக்கத்திலிருந்து வந்தவர்களும் கூட்டமைப்பில் இருக்கின்றனர்.

நாங்கள் இந்தச் சபையை விட்டுப் போனால் பல இளைஞர் , யுவதிகள் இங்கு வருவார்கள் என்பதனால் எம்மை அச்சுறுத்தி அடிபணிய வைக்கமுடியாது. தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற யுத்திற்கு ஐ.தே.கட்சி , ஜே.வி.பி , ஹெல உறுமய ஆதரவாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. சிங்கள அரசியல் தவறுகளே பிரச்சினை விஸ்வரூபம் எடுக்க காரணமாகும். பிரபாகரனை கொன்றொழிக்கலாம், புலிகளின் இயக்கத்தை அழிக்கலாம். ஆனால், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் வரையிலும் எழுச்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது .

பிரச்சினைக்கு பேச்சு வார்த்தையின் மூலமாக தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிடின் சர்வதேச சட்டத்திற்கு அமைவாக தனிஇறைமையுடன் வாழ்வதைத் தவிர்க்க முடியாது. (ஓ-5)

# மும்பை தாக்குதலை புலிகள் ஏன் கண்டிக்கவில்லை

## இந்து நாளிதழ் கேள்வி?

(சென்னை)

மும்பையில் இடம்பெற்ற தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏன் கண்டிக்கவில்லை என தமிழ் நாட்டின் இந்து நாளிதழ் எழுப்பிய கேள்விக்கு, தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சியின் புதிய தமிழர் கண்ணோட்டம் இதழில் பதிலிறுக்கப்பட்டுள்ளது.

தமிழீழத் தேசியத் தலைவரது மாவீரர் நாள் உரையில் மும்பை தாக்குதல் கண்டிக்கப்படவில்லை எனவும் அல்லது பின்னரேனும் கண்டித்திருக்கலாம் என்றும் இந்து நாளிதழ் கடந்த முதலாம் திகதி ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்திருந்தது.

அனைத்துலக விடயங்களில் விடுதலைப் புலிகள் ஆதரவை அல்லது கண்டனத்தை தெரிவிப்பதில்லை என்பதைச் சுட்டிக் காட்டும் தமிழர் கண்ணோட்டம், அவ்வாறு கண்டனம் தெரிவித்திருந்தால் கூட,

இந்தியாவை ஏமாற்ற விடுதலைப் புலிகள் செய்யும் சூழ்ச்சி இதுவென இந்து நாளிதழ் மாற்றுப் பரப்புரை மேற்கொண்டிருக்கும் எனவும் குறிப்பிடுகின்றது.

(ஓ-5)

# ஊழியர்கள் மீதான கெடுபிடிகளுக்கு ஐ.நா எதிர்ப்பு

தமது அமைப்பு உள்ளிட்ட தொண்டு நிறுவன ஊழியர்கள் மீது இலங்கை அரசாங்கம் விதித்துள்ள கெடிபிடிகளுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் நிறுவன ஊழியர்களுக்கு விஸா வழங்கும் நடைமுறை உள்ளிட்ட பல்வேறு நடைமுறைகளில் அரசாங்கம் கடுமையான விதிமுறைகளை பின்பற்றி வருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச பிரகடனங்களுக்கு புறம்பான வகையில் இலங்கை அரசாங்கத்தின் புதிய சட்டங்கள் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விஸா பெற்றுக்கொள்வது தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டுள்ள சட்டக்கட்டுப்பாடுகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமையவில்லை என ஐக்கிய நாடுகள் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஓ-5)

# கிராம சேவையாளர்கள் நியமன விடயத்தில் எவ்வித ஊழல்களும் இடம் பெறவில்லை

## அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் திசாநாயக்க

(கொழும்பு)

கிராமசேவகர் நியமன விடயத்தில் இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக எவ்வித ஊழல்களும் அரச தலையீடுகளும் இன்றியே எமது அமைச்சால் போட்டிப் பரீட்சையும் நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டு அண்மையில் நியமனமும் வழங்கப்பட்டது. இந்நிலையில், நாம் ஊழலில் ஈடுபட்டு எமக்கு வேண்டியவர்களுக்கு கிராம சேவகர் நியமனம் வழங்கியதாகவும் இதில் அரசியல் தலையீடு உள்ளதாகவும் கூறப்படுவதை எவ்விதத்திலேனும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறு அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செய லா ளர் ரி. திசாநாயக்க தெரிவித்தார்.

அண்மையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற கிராம சேவகர் நியமனம் குறித்து செய்தியாளர் சந்திப்பில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண் டவா று குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சுமார் ஒன்று, ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கிராமசேவகர்களுக்கான போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையில் இரண்டு இலட்சத்துக்கும் அதிக மானவர்கள் தொகுதி வாரியாக தோற்றினார்கள்.

இப்பரீட்சையில் 2 ஆயிரத்து 600 பேர் தெரிவாகி நியமனமும் வழங்கப்பட்டது. எனினும், கிராம மட்டங்களில் நியமனம் வழங்கப்படாத சிலர் ஊடகங்களுக்கு இக்கிராம சேவகர் நியமன விடயத்தில் ஊழல்களும் அரச தலையீடுகளும் இடம் பெற்றதாக தவ றான தகவல்களை வழங்கி எம்மீது குற்ற ஞ் சாட்டியுள்ளனர். குறிப்பிட்ட தொலைக் காட்சி ஊடகமும் அதன் உண்மை நிலை வரத்தை உரிய முறையில் ஆராயாது அச் செய் தியை வெளியிட்டுள்ளது.

உண்மையில் நான் உட்பட இங்குள்ள உயர் அதிகாரிகளும் கூட ஆக அடிமட்டத்திலிருந்து மிகவும் கஷ்டப்பட்டே இந் நிலைக்கு உயர்ந்தோம்.

கஷ்டப்பட்டவனின் மனநிலை எமக்கு நன்கு புரியும். ஆகவே எவரதும் வயிற் றிலும் அடிக்கவேண்டிய தேவை எமக்குக் கிடையாது. அப்படிப்பட்டவர்களும் நாம் அல்லர். அவ்வாறு ஊழலில் ஈடுபடுவோ மாக இருந்தால் தற்போது நாம் செய்யும் தொழிலை விட வேறு சிறந்த தொழிலில் ஈடுபட்டிருக்கலாம்.

எனவே, மீண்டும் மீண்டும் நாம் கூறுவது என்னவெனில் இங்கு எவ்வித ஊழ லோ அரச தலையீடுகளோ ஏற்படவில்லை. பரீட்சைகளில் தோற்றி குறைந்த மதிப்பெண்களைப் பெற்றவர்களே இவ்வாறு ஊடகத்துக்குத் தவறான செய்தியை வழங்கி எம்மீது சேறு பூசியுள்ளனர்.

கிராமசேவகர் நியமன விடயத்தில் இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக எவ்வித ஊழல்களும் அரச தலையீடுகளுமின்றியே எமது அமைச்சால் போட்டிப் பரீட்சை யும் நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டு அண்மையில் நியமனமும் வழங்கப்பட்டது. இந்நிலையில் நாம் ஊழலில் ஈடுபட்டு எமக்கு வேண்டியவர்களுக்கு கிராம சேவகர் நியமனம் வ்ழங்கியதாகவும் இதில் அரசியல் தலையீடு உள்ளதாகவும் கூறப் படுவதை எவ்விதத்திலேனும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

இச்செய்தியாளர் சந்திப்பில் பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்கவும் கலந்து கொண்டார். (ஓ-5)

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு சபை அனுமதி

## தனி நபர் வாக்கெடுப்பின் பின்னர் பிரேரணை நிறைவேற்றம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள எஸ். சுவர் ண ஜோதியின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு பாரா ளுமன்றம் கடந்த திங்கட்கிழமை அனு மதியளித்தது. இது தொடர்பான பிரேரணை பாராளுமன்றத்தில் 39 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 101 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் கிடைத்தன.

வரவு- செலவுத்திட்ட வாக்கெடுப்பிற்கு பின்னர் சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபாலடி சில்வா,தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க ஓய்வு பெற்றதன் பின்னர் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட திகதி யிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்குதல், நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி அவர்களின் மாதாந்தச் சம்பளத்தில் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள எஸ். சுவர்ணஜோதியின் சம்பளத்தை அதிகரித்தல் ஆகியமூன்றுபிரேரணைகளைமுன் வைத் தார்.

இதனை தொடர்ந்து எழுந்து எதிர்கட்சி பிரதம கொறடாவும் எம். பியுமான ஜோசப் மைக்கல் பெரேரா, முதல் இரண்டு பிரேரணைகளையும் வாக்கெடுப்பின்றி நிறைவேற் றிக் கொடுப்பதற்கு எதிர்கட்சிகள் தயாராகவே இருக்கின்றன. எனினும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடு மீறப்பட்டுள்ளதுடன் 17 ஆவது அரசியலமைப்பி ன் பிரகாரம் ஆணைக் குழுக்களை நிறுவியதன் பின்னர் தேர்தல் நடத்தப் படுமா யின் சிறந்தவையாக அமையும் என்றும் சுட்டிக் காட்டினார்.

அதனை தொடர்ந்து எழுந்த ஜே.வி.பி. யின் பாராளுமன்ற குழுத்தலைவரும் எம். பியுமான அனுரகுமார திஸாநாயக்க முதல் இரண்டு பிரேரணைகள் தொடர்பிலும் தமக்கு எவ்விதமான கருத்து முரண்பாடுகளும் கிடையாது. எனினும், மூன்றாவது பிரேரணை தனி நபரொருவரின் சம்பளத்தை அதிகரிப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் எவ்விதமான கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை என்று சுட்டிக் காட்டியதுடன் இந்த சம்பள அதிகரிப்பு எதிர்காலத்திற்கு நியமிக்கப் படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் வழங்கப்படுமா? என்றும் கேள்வியெழுப்பி அவர் அந்த பிரேரணை மீது தனிநபர் வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும் என்றும் சபையில் கோரினார்.

தொடர்ந்து அந்த பிரேரணை மீது பெயர் குறிப்பிட்டு தனிநபர் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக அரசாங்கத்துடன் இணைந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையகமக்கள் முன்னணி, ஜாதிக ஹெல உறுமய, ஈ.பி.டி.பி., தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயகக் குழு பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

அந்த பிரேரணைக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி., மேலக மக்கள் முன்னணி, தமிழ் தேசியக்கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர். பிரேரணை மீது வாக் கெடுப்பு நடத்தப்பட்ட போது விமல் வீரவன்ச எம்.பி. தலைமையிலான குழுவினர் சபையில் பிரசன் னமாக இருக்கவில்லை. (ஓ-5)

# சர்வதேச மனித உரிமைகள் தினமும் இலங்கையின் இன்றைய நிலையும்

உலகில் மனித உரிமை பிரகடனத்தின் சரித்திரங்களை ஆராயுமிடத்து தற்போதைய உலகில் உள்ள பலர் நம்பவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாத பல உண்மைகள் புலனாகின்றன. மிக அண்மைக்காலமாக பெரும் சர்ச்சைக்குரிய நாடுகளான ஈரான், ஈராக் ஆகிய இரு நாடுகளும் அதாவது முந்தைய பாரசீகம், மெசபத்தேமியா என அழைக்கப்பட்ட நாடுகள் கிறிஸ்துவுக்கு முன் 539 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட மனித உரிமை பிரகடனத்தின் பதிவில் உள்ளன.

சுருக்கமாக கூறுவதனால் பாரசீக போர் வீரர்கள், மெசப்பத்தேமியாவின் பாபிலோன் என்ற நகருக்குள் கி.மு. 539 இல் சென்று அங்கு தலைமுறை தலை முறையாக அடிமைகளாக வைக்கப்பட்டிருந்தவர்களை விடுதலை செய்தபொழுது அதே வருடம் நவம்பர் மாதம் பாரசீக அரசன் பாபிலோனியாவுக்கு சென்று அங்கு ஓர் பிரகடனத்தை களிமண் பாத்திரத்தில் எழுதினாராம். அதை *சைறஸ் மனித உரிமை பிரகடனமாக* ஏற்றுக் கொள்கிறார்கள். இப் பாத்திரம் பிரித்தானியாவின் லண்டன் நூதனசாலையில் இருந்த பொழுதும் கடந்த இரு வருடங்களாக ஈரானின் நூதனசாலையின் கண்காட்சிக்கு இரவலாக கொடுக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

காலங்கள் உருண்டோடி ஐக்கிய நாடுகள் சபையின் உதயத்தை தொடர்ந்து 1946 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு உதயமாகியது. ஐம்பத்து மூன்று அங்கத்துவ நாடுகளைக் கொண்ட இம் மனித உரிமை ஆணைக்குழு, தனது முதல் வேலைத் திட்டமாக சர்வதேச மனித உரிமை பிரகடனத்தை உருவாக்குவதற்கு ஒரு குழுவை உருவாக்கியது.

## இன்று 60 ஆவது சர்வதேச மனித உரிமைகள் தினம்

இக்குழுவிலிருந்த அமெரிக்காவை சேர்ந்த திருமதி எளிறோர் நுஸ்வெல்ற், பிரான்ஸைச் சேர்ந்த ரேனேகசன், லெபனானை சேர்ந்த சாள்ஸ் மாலிக், சீனாவை சேர்ந்த பென்ங்சன் சுங் ஆகியோருடன் வேறு பலரும் சேர்ந்து உருவாக்கிய *சர்வதேச மனித உரிமை பிரகடனம்* 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் உள்ள *பலேடு சாயிலோற்* என்ற மண்டபத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த மனித உரிமை பிரகடனம் முப்பது சரத்துக்களை உள்ளடக்கியுள்ளது. இதில் முதலாவது சரத்து, சுதந்திரமாக பிறக்கும் மனிதர்கள் யாவரும் சமமானவர்களெனவும் மதிப்பையும், நியாயத்தையும் கொண்டவர்களெனவும் கூறுகின்றது. இரண்டாவது சரத்து இன, மத, மொழி, பால், நிறம், அரசியல் வேறுபாடுமின்றி, சமூக வேறுபாடுமின்றி இப்பிரகடனம் சகலருக்கும் உரித்தானதாக கூறப்படுகின்றது. சரத்து மூன்றிலிருந்து இருபத்தொன்று (3-21) வரை உள்ளவற்றில் மனித இனத்தின் சிவில், அரசியல் உரிமைகள் பற்றி கூறப்படுகின்றது.

அதாவது பாதுகாப்பு, அடிமைத்தனம், சித்திரவதை, சட்டத்தின் முன்னால் சமத்துவம், வேறுபாடு, அடிப்படை உரிமைகள், கைது, நீதி, நிரபராதி, அரசியல் தஞ்சம், துன்புறுத்தல், திருமணம், சொத்துரிமை, சிந்தனை உரிமை, பேச்சு சுதந்திரம், தகவல் பரிமாற்ற உரிமை, ஒன்று கூடும் சுதந்திரம் போன்றவற்றை பற்றி அவை கூறுகின்றன. மற்றைய சரத்துகளான இருபத்தி இரண்டிலிருந்து இருபத்தி ஏழு வரையானவை (22-270 மனித இனத்தின் பொருளாதார சமூக கலாசார உரிமைகளை உள்ளடக்கியுள்ளன. அதாவது வேலை, உடை, உணவு, தங்குமிடம், மருத்துவ பராமரிப்பு, கல்வி போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.



வன்னியில் படையினரால் போடப்பட்டு வெடித்த கிளஸ்ரர் குண்டு ஒன்றின் வெளிப்புறப் பகுதி

இதில் இறுதி சரத்துக்களான இருபத்து எட்டிலிருந்து முப்பது வரை இச் சாதனத்தின் நடைமுறை பொறுப்பு, உரிமை ஆகியவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

இந்த சர்வதேச மனித உரிமை பிரகடனத்தை சரியான முறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கடமைப்பாடு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டுக்கும் உரியது. இப் பிரகடனம் நடைமுறைக்கு வந்த பொழுது ஐ. நா. வில் ஐம்பத்து எட்டு நாடுகள் மட்டுமே அங்கம் வகித்திருந்த காரணத்தினால் இவ் பிரகடனம் தனது ஐம்பதாவது வருடத்தை கொண்டாடிய பொழுது விசேடமாக *ஆசியான்* அமைப்பை சேர்ந்த நாடுகளான மலேசியா, சீனா போன்ற நாடுகள் இப்பிரகடனத்தை மறுசீரமைக்க வேண்டுமென கோரின.

இப்பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேளையில் இலங்கை ஐ.நா.வில் அங்கத்துவம் பெற்றிருக்கவில்லை. ஆனால் ஆங்கிலேய காலனித்துவத்திடமிருந்து இலங்கை அதே ஆண்டில் தான் சுதந்திரத்தை பெற்றுக் கொண்டது. நாம் ஏற்கனவே பார்த்த சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் சரத்தில் எவற்றை இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்களுக்கு சாதகமாக இலங்கை ஆட்சியாளர் பாவித்துள்ளார்கள்? உண்மையை கூறுவதானால் சர்வதேச மனித உரிமை பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள அத்தனை சரத்துக்களையும் இலங்கை மீறியுள்ளதற்கான ஆதாரங்கள் பல உள்ளன.

இலங்கைத் தீவுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்ட குடியுரிமை, வாக்குரிமை பற்றி எடுத்துக் கூறும் சரத்தான இருபத்தியொன்று (21) மீறப்பட்டு விட்டது. இதை தொடர்ந்து 1956 ஆம் ஆண்டு சிங்களச் சட்டம் மூலம் சரத்து 2 உம் 3 உம் மீறப்பட்டுள்ளன. 1956 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தொடர்ந்து மேற் கொள்ளப்பட்ட இனக் கலவரங்கள் மூலம் சாரம் 3, 5, 12,17 ஆகியவை மோசமாக மீறப் பட்டுள்ளன.

நூறு ஆண்டுகளுக்கு மேலாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களை 1964 ஆம் ஆண்டு சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் நாடு கடத்தியதன் மூலம் சாரம் 4, 15, 23 ஆகியவை மீறப்பட்டுள்ளன. தமிழ் மாணவர்கள் சமகல்வி மறுக்கப்பட்டு தரப் படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் சாரம் 26 மீறப்பட்டுள்ளது. தொடர்ச்சியான அவசரகால நிலையுடன் கூடிய பயங் கரவாதச் சட்டம் மூலம் சரத்துக்கள் 2,3,5, 6,7,8,9,10,11,12 மீறப்பட்டுள்ளன.

இது பற்றி மேலும் விபரிப்பதானால் அடிதடி, கல் எறி, தீவைப்பு போன்றவற்றால் தமிழர் மீது ஆரம்பிக்கப்பட்ட அடக்கு முறை இன்று எறிகணை, விமானத் தாக்குதல், கிளஸ்ரர் குண்டு வீச்சுக்கு வந்துள்ளது. இவை குறித்த விமர்சனங்களுக்கான இலங்கையின் மாறுபட்ட ஆட்சியாளர்களின் பதில் இது ஒரு உள்நாட்டுப் பிரச்சினை என்பதாகும். இது உண்மையாக இருந்தால் எந்த அரசு தனது மக்கள் மீது, இரு நாடுகளுக்கு இடையிலான போரில் பாவிக்கப்படும் ஆட்லெறி ஏவுகணைத் தாக்குதலையும் விமானத் தாக்குதலையும் தற்பொழுது கிளஸ்ரர் குண்டு வீச்சையும் மேற்கொள்கிறது?

இது மட்டுமல்லாது எங்கு உணவு, உடை, மருந்து போன்றவற்றால் அவதியுறும் மக்களுக்கு கொடுக்காது அவர்கள் தஞ்சம் கோரியுள்ள மண்டபங்கள் மீது கிளஸ்ரர் குண்டுகளை வீசி குழந்தைகளில் இருந்து முதியோர் வரை கொல்வார்கள்?

இலங்கை அரசாங்கம் கிளஸ்ரர் குண்டுகளை பாவிக்கிறது என்ற குற்றச் சாட்டை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல நிராகரித்துள்ளார் என பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது இது ஒரு ஜனநாயக அரசு, மனித உரிமைகளை மதிக்கும் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையா? இது தான் தமிழ் மக்களுக்கு கடந்த அறுபது வருடங்களாக கிடைக்கப் பெற்ற தீர்வா? இப்படியான மனித உரிமை மீறல்களை மேற்கொள்ளும் அரசு எப்படியாக நாட்டின் இறையாண்மை பற்றி பெருமை கொள்ள முடியும் என்பது பற்றி இந்த சர்வதேச மனித உரிமை தினத்திலாவது ஒரு தடவை சிந்திக்க வேண்டும். (ஓ-6)

ச.வி. கிருபாகரன்
பொதுச் செயலாளர்
தமிழர் மனித உரிமைகள் மையம்
பிரான்ஸ்

# வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை

## மாதுளை

Botanical Name - Punica granatum
Family- Punicaceae
Engl - Pomegranate
Sinh - Delun

சிறிய மரம்; அல்லது உயரமான புதர்ச் செடி; கொப்புக்கள் முட்கள் கொண்டவை; இலைகள் குட்டையான காம்புடன் கொத்தாக அமைந்தவை; முட்டை வடிவின; மலர்கள் நுனி அல்லது இலைக்கோணத்தில் காணப்படும்; தனி மலர்கள்; பெரியவை, கவர்ச்சி யானவை; செம்மஞ்சள் - சிவப்பு அல்லி இதழ்கள், புல்லி வட்டம் தடிப்பானது; கனியிலும் தொடர்வது; கனிகள் பெரியவை; கோணவடிவின; கனி உறை தடிப்பானது ; உட்பக்கம் சிவப் பாகவும், சதைப்பற்றுடன் இருக்கும்; விதைகள் கோண வடிவின; விதையுறை தடித்தது.

**பரம்பலும், இனவிருத்தியும் :**

எமது பிரதேசத்தில் பயிரிடப்படும் பழ மரங்களில் இதுவும் ஒன்று. ஆனால் இம் மரத்தின் தாயகம் ஆப்கானிஸ்தானும், ஈரானும் ஆகும். இது வேர்ப்பதியம் மூலமாகவும் மண்பதியங்கள் மூலகமாகவும் இனவிருத்தி செய்யப்படுகின்றது. இது வரட்சியை தாங்கி வளரும் மரம். மாதுளை உலர், களர் நிலங்களில் வளரும். தரமான பழங்கள் கிடைக்க வரட்சியான கோடைகாலமும், குறைந்த வெப்பமுள்ள குளிர்காலமும் தேவை. ஆனி முதல் மார்கழி மாதங்களில் 60 செ.மீ X 60 செ. மீ X 60 செ.மீ. அளவுள்ள குழிகளில் 2.5-3மீற்றர் இடைவெளியில் நட்டு வளர்க்கலாம். நட்ட $2\frac{1}{2}$ முதல் 3 ஆவது ஆண்டிலிருந்து பழங் களை அறுவடை செய்யலாம்.

**சத்துக்கள்.**

100 கிராம் பழத்தில்,

புரதம் 1.6 கிராம், கொழுப்பு 0.1 கிராம், நார்ப்பொருள் 5.1 கிராம், மாப்பொருள் 14.5 கிராம், கல்சியம் 10 மி.கி, தயமின் 0.06 மி.கி, மக்னீசியம் 70 மி.கி, விற்றமின் C 16 மி.கி, பொட்டாசியம் 133 மி.கி.

**மருத்துவப் பயன்கள் :-**

இதன் பழம், விதை, தோல், பிஞ்சு, பூ, பட்டை முதலியன மருந்திற்குதவுகின்றன.

**பழம்**

✪ பழம் மிகுந்த தாகத்தை போக்கும். மாதுளம் பழத்தைப் பிழிந்து வடிகட்டி போதுமான அளவு சீனி அல்லது கற்கண்டை கலந்து குடிக்க வெப்பம் நீங்கி உடல் குளிர்ச்சி உண்டாகும். நினைவாற்றலை அதிகரிக்கும்.

✪ பழரசத்துடன் சிறிதளவு தேன்கலந்து சாப்பிட அஜீரணக் கோளாறு போகும், மலத்தை இளக்கும்.

✪ கசப்பு வகை மாதுளை வயிற்று நோய்களுக்கும் இதய வலிக்கும் உதவும். கசப்பு வகை மாதுளைச் சாற்றை கண் இமை, தலைமயிர் அகியவற்றில் சூடேறும் அளவிற்கு தினந்தோறும் ஓரிரு முறை தேய்த்துவர "பூச்சி வெட்டு" என்பதால் உண்டாகும் மயிர் உதிர்தல் குறையும்.

✪ மாதுளம்பழச்சாற்றில் மெல்லிய புது வெள்ளைத் துணியை நனைத்து வெயிலில் உலர்த்தவும். இவ்வாறு நான்கு அல்லது ஐந்து முறை நனைத்து, உலர்த்திக் கொளுத்தவும். இத்துணிச் சாம்பலை ஆமணக் கெண்ணெயில் குழைத்து கண்மையாக பயன்படுத்தினால் கண்ணுக்கு குளிர்ச்சி உண்டாகும். கெடுதல் எதுவும் உண்டாவதில்லை.

**விதை :**

✪ விதையை உலர்த்திப் பொடித்துப் பாலில் கலந்து அருந்த இரத்த சோகை குணமாகும். சிறுநீர்த்தாரை எரிச்சல் போகும். வித்து கெட்டியாகும். மாதுளம் விதை உட லிற்கு ஊட்டத்தையும், ஆண்மையையும் தரும்.

**பழத்தோல்**

✪ மாதுளம் தோலை உலர்த்தி இடித்து கராம்புத் தூள் சிறிது கலந்து தேனுடன் கொடுக்க வயிற்றோட்டம், வயிற்றுக்கோளாறு நிற்கும்.

✪ உலர்த்திய பழத்தோலுடன் சமஅளவு சாதிக்காயை எடுத்து பொடித்து சாப்பிட குருதி, சீதபேதி, வயிற்றுப் போக்கு நீங்கும்.

✪ பழத்தோலை உலர்த்தி பொடித்து, உப்புடன் சேர்த்து இடித்து பல்துலக்க பல்வலி குணமாகும். பல் ஈறு உறுதியடையும்.

✪ பழத்தோலை பச்சையாக அரைத்துத் தயிருடன் அல்லது மோருடன் கலக்கி அருந்த வயிற்றுக்கடுப்பு , வயிற்றோட்டம் குணமாகும்.

✪ பழத்தோலுடன் சிறிது கராம்பு, இலவங்கப்பட்டை நசுக்கிப்போட்டு குடிநீரிட்டு 15-30 மில்லி வீதம் தினம் 3-4 வேளை தர நாட் பட்ட சீதம் குணமாகும்.

**பிஞ்சும், பூவும்:**

✪ மாதுளம் பிஞ்சை காரமில்லாமல் சுத்தமாக கழுவிய அம்மியிர் மைபோல் அரைத்து மோர் அல்லது தயிர் கலந்து அருந்த சீதபேதி, வயிற்றுப் போக்கு குணமாகும்.

✪ மாதுளம்பூ குருதியை பெருக்கும். பலத்தை தரும் உடல்வெப்பம், இரத்த மூலம், குருதி வாந்தியை தணிக்கும். பூக்கசாயத்துடன் போதியளவு சீனி அல்லது கற்கண்டு சேர்த்து கலக்கி அருந்திவர பித்தவாந்தி, ஆசனக்கடுப்பு நீங்கும்.

✪ அறுகம்புல் சாறு, மாதுளம் பூச்சாறு ஆகியவற்றை சமஅளவு எடுத்து கலந்து தினம் மூன்றுவேளை அருந்திவர மூக்கிலிருந்து இரத்தம் வடிதல் நிற்கும்.

✪ பூமொட்டுக்களை உலர்த்திப் பொடித்து 100 கிராம் அளவு தேனுடன் கலந்து கொடுக்க இருமல் நீங்கும்.

**பட்டை :**

மாதுளையின் காய்ந்த தண்டு, வேர்ப் பட்டைக் குடிநீர் நாடாப்புழுக்களைக் கொல்லும். வேர்க்குடிநீர் தொண்டைக் கரகரப்பு, நாட்பட்ட வயிற்றோட்டத்தை குணப்படுத்தும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

உன்னால் முடிந்ததை எல்லாம் செய்து விட்டு இறைவனிடம் உதவி கேள்.

– ஆபிரிக்கா

வலம்புரி

## யாழ்.மாவட்ட பாடசாலைகளை திருத்தியமைக்க விசேட திட்டம் தேவை

யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட நிஷா புயல், மழை காரணமாக ஏகப்பட்ட சொத்தழிவுகள் ஏற்பட்டது பற்றி இப்பகுதியில் பல தடவைகள் குறிப்பிட்டிருந்தோம்.

இவற்றுக்கான நிவாரணக் கொடுப்பனவுகளை விரைவுபடுத்த சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டுமென்பதும் தாழ்மையான வேண்டுதல்.

அதேநேரம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் தொடர்பில் விசேட குழுவொன்றை நியமித்து இழப்பீடுகளைத் திரட்டுவதும் அவற்றை செப்பனிடுவதும் தேவையாகவுள்ளது.

பொதுவாக யாழ்.மாவட்டத்தில் வெள்ளத்தினால் சேதமடைந்த பாடசாலைகள் பற்றிய தரவுகளை தொகுத்துப் பகுப்பாய்வு செய்தால் தொண்ணூறு வீதமானவை பின்தங்கிய பாடசாலைகளாக இருப்பதைக் கண்டறிய முடியும்.

பௌதிக வளப் பற்றாக்குறையுள்ள இப்பாடசாலைகளை இயற்கையும் சீண்டியுள்ளதால் அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது.

அந்தப் பாடசாலைகளை முதன்மைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அதிபர்கள், ஆசிரியர்களின் மன நிலையும் இத்தகைய இழப்பில் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

பிரபல்யமான –வசதி படைத்த –செல்வாக்குடைய பாடசாலைகள் பல தடவைகள் விழுந்தாலும் அவை மீண்டும் எழுந்து பழைய நிலைக்குத் தம்மை தயார் படுத்திக் கொள்ளும்.

இதற்காக அந்தப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள், வெளிநாடுகளில் வசிக்கும் பழைய மாணவர்கள் எனப் பலரும் நிதியுதவி வழங்கி நிலைமையைச் சமாளித்துக் கொள்வர்.

ஆனால் பின்தங்கிய –ஏழைப் பிள்ளைகள் கற்கும் பாடசாலைக் கட்டடங்கள் இடிந்தால் அதனைத் திருத்துவதற்கு எவருமே முன்வர மாட்டார்கள்.

சுருங்கக் கூறின் இத்தகைய பாடசாலைகளில் விழுந்த மரங்களைத் தறிப்பதற்குக் கூட வசதியில்லை என்று கூறிக் கொள்ளலாம்.

இதுவே யாழ்ப்பாணப் பாடசாலைகளின் அமைப்பு. இதனாலேயே ஏற்ற இறக்கமுடைய சமூகமொன்று யாழ்ப்பாணத்தில் உருவாகி வருகிறது.

இதனை மழையும் புயலும் மேலும் ஊக்குவிக்கின்றது. இத்தகைய மோசமான சூழலை முறியடிக்க யாழ்ப்பாண அரசாங்க அதிபரும், யாழ்.மாவட்டத்தின் ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களும் முன்வரவேண்டும்.

இதற்காக சேதமடைந்த –பின்தங்கிய பாடசாலைகளைச் சீரமைக்க விசேட குழுவொன்று நியமிக்கப்படவேண்டும்.

இதற்கு யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் நிதியுதவி வழங்கவும், பாடசாலைகளை தமது பொறுப்பில் சீரமைக்கவும் உதவுவது ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்ப உதவும் பெரும் பணியாகும்.

யாழ்ப்பாணத்தில் பின்தங்கிய பாடசாலைகள் எப்போது கவனிக்கப்படுகின்றனவோ – அவற்றுக்கு எப்போது வள ஒதுக்கீடு நேர்மையாகக் கிடைக்கின்றனவோ அன்றுதான் ஏழைக் குடும்பங்களுக்கு விடிவு கிடைக்கும்.

# நிலநடுக்கம் இல்லாத வீட்டில் குடிபுகுங்கள்!



மகராஜி என்னும் கௌரவப்பெயரால் அழைக்கப்படும் பிறேம் ராவட் அவர்களின் ஐம்பத்தோராவது பிறந்தினம் இன்றாகும். உலகில் அமைதியைத் தேடும் மக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையில் அமைதியை அனுபவிப்பதற்கு வழிகாட்டுகிறார். அவர் தனது மூன்றாவது வயதில் முதல் முதலாக பொது நிகழ்ச்சியொன்றில் உரையாற்றத் தொடங்கினார். பதின்மூன்றாவது வயதில் சர்வதேச ரீதியில் இச் செய்தியைக் கொண்டு சென்றார். அன்றிலிருந்து ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளுக்கு பிரயாணம் செய்து 4.5 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களுக்கு அவர் உரையாற்றியுள்ளார். அவரது செய்தியின் சாரம் பின் வரும் தலைப்புக் களில் தரப்படுகிறது.

**மகராஜியின் ஐம்பத்தோராவது பிறந்ததின நிகழ்ச்சிகள் இன்று காலை 10.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நிகழவிருக்கிறது. ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் பங்குபற்றி பயன்பெறலாம்.**

### இறைவனின் வீடு

இறைவனின் வீடு செங்கற்களால் கட்டப்பட்டது அல்ல. இறைவனின் வீடு பெரும் கோபுரங்களால் ஆனதும் இல்லை. மாறாக இறைவனின் வீடு மனிதர்களின் இதயத்தில் இருக்கிறது. ஏனெனில் அந்த ஓர் இடம் தான் நில நடுக்கம் வந்தாலும் அழி யாது. எவ்வளவு நெருப்பு பற்றிக் கொண்டு எரிந்தா லும் அந்த இடத்தைத் தொடாது. அந்த ஒரு இடம் தான் முற்றிலும் புனிதமானது. முற் றிலும் நிஜமானது. அந்த நிஜமான இடம் தான் உங்களை அழியாப் பொருளுடன் இணைக்கிறது. எனவே நில நடுக் கம் இல்லாத வீட்டில் குடிபுகுங்கள்!

### முக்தியின் ராஜ்ஜியம்

உன் பொக்கிஷம் உன்னுள்ளே இருக்கிறது. அங்குதான் முத்தியின் ராஜ்ஜியம் இருக்கிறது. அங்கு அமைதி நிலைத் திருக்கிறது. ஆனந்தம் நிரம்பியிருக்கிறது. அன்பு நிறைந் திருக்கிறது. ஆகவே உன் உள்ளே தேடு. நீ தேடுவது உன் உள்ளேதான் இருக்கிறது. பசுமையாக இருக்கிறது. சிறப்பாக இருக்கிறது. எளிமையாக இருக்கிறது. உன் தேடலுக்கு நான் உதவுவேன்!

*நி.சரவணபவன்*

# பரராஜசிங்கம் எம்.பி.யின் படுகொலை விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம்

## சபையில் அமைச்சர் தினேஷ் தகவல்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பிலான விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றம் சபாநாயகர் வி.ஜே.மு. லொக்கு பண்டார தலைமையில் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கூடியது. வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது ரவி கரணாநாயக்க எம். பி. கேட்டிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 2006 ஜனவரி 01ஆம் திகதி முதல் இன்று வரையிலும் ஜனாதிபதி, அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக் குழு மற்றும் அதன் நடவடிக்கை உள்ளிட்ட பல பகுதி கேள்விகளை கேட்டிருந்தார். கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் தினேஷ் குணவர்தன, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், ஜெயராஜ், த.மு. தஸநாயக்க ஆகியோர் படுகொலை தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. பரராஜசிங்கம் படுகொலை தொடர்பான விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டு விட்டது. ஜனாதிபதி விரும்பினால் அறிக்கையை பகிரங்கப்படுத்துவார் என்றார்.

இதன்போது குறிக்கிட்ட ரவி கருணாநாயக்க எம்.பி. 'ஹெஜிங்' தொடர்பிலும் விசாரிப்பதற்கு ஆணைக்குழு நியமிப்பீர்களா? என்று கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அமைச்சர், 'முறையே' இல்லாதவர்களுக்கு இடையில் சகோதர முறைமையை ஏற்படுத்துவதற்கு உறுப்பினர் முயற்சிக்கின்றார் என்றார். (ஓ-5)

# எல்லா மக்களையும் அழித்து விட்டு இலங்கை அரசு யாருடன் பேசப் போகின்றது?

## தி.மு.க உறுப்பினர் கனிமொழி கேள்வி

எல்லா மக்களையும் அழித்து விட்டு இலங்கை அரசாங்கம் யாருடன் பேச்சு நடத்தப் போகின்றது என திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கேள்வி எழுப்பியுள்ளார்.



இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்கள்மீது இராணுவத் தாக்குதல் நடத்தும் இலங்கை அரசாங்கத்தை கண்டித்து தமிழக அரவாணிகள் சங்கங்களின் சார்பில் சென்னையில் திங்கட்கிழமை உண்ணா நிலைப் போராட்டம் நடை பெற்றது. சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் நடைபெற்ற இந்த உண்ணா நிலைப் போராட்டத்தினை தொடக்கி வைத்து உரையாற்றிய கனிமொழி மேலும் தெரிவித்ததாவது,

சமுதாயத்தினால் ஒடுக்கப்பட்டு, மொழியற்று புறக்கணிக்கப்பட்டு வாழ்கின்ற அரவாணிகள், இலங்கைத் தமிழர்களுக்கான உண்ணா நிலைப் போராட்டம் நடத்துவது மிகவும் குறிப்பிடத்தக்கதும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும்.

ஏனென்றால் ஒடுக்கப்பட்ட மக்களுக்குத்தான் ஒடுக்கபட்ட மக்களின் வலி தெரியும். இந்த சமூகத்தில் அரவாணிளுக்கு உணர்வு , உரிமை ஆகிய அனைத்தும் உள்ளது. அரவாணிகளுக்கு வேலை வாய்ப்பு கல்வி அங்கீகாரம் ஆகியனவற்றை மறுக்கப்படுகிறது.

பெண்கள் என்றால் சமூக அக்கறை இல்லாதவர்கள் என பலர் நினைக்கின்றனர். இந் நிலை மாற வேண்டும். இலங்கையின் இனப் படுகொலையால் தமிழர்கள் அழிக்கப்பட்டு வருகின்றனர். மனித உரிமைகள் மீறப்படுகின்ற தமிழர்கள் எந்த மண் சொந்த மண்ணோ அங்கேயே அவர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்

இலங்கை அரசு அனைத்து மக்களையும் அழித்து விட்டுத் தான் போர் நிறுத்தம் என்று அறிவித்துள்ளது.

எல்லா மக்களையும் அழித்து விட்டு , யாருடன் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தப் போகிறார்கள் என்பது தெரியவில்லை இலங்கையில் நடக்கும் படுகொலையை கண்டித்து பல்வேறு அரசியல் கட்சிகள் போராட்டங்கள் நடத்தப் பட்டன. முதலமைச்சர் கருணா நிதி தலைமையில் அனைத்துக் கட்சிக் குழுவும் டெல்லி சென்று போரை நிறுத்தப் பிரதமரிடம் வலியுறுத்தி வந்துள்ளனர்.

மாணவர்கள் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர் இந்த நிலையில் அரவாணிகள் அவர்களுக்காக போராடி வந்த நிலையில் தற்போது சமுதாய அக்கறையுடன் இலங்கைத் தமிழர்களுக்காக போராட்டம் நடத்துவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்றார் அவர்.

உண்ணா நிலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட அரவாணிகள் அனைவரும் கறுப்பு சேலை அணிந்திருந்ததுடன், தங்களது ஒரு நாள் சம்பளத்தையும் இலங்கைத் தமிழர்களுக்காக கொடுத்தனர். (ஓ-5)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## சுயநலமின்மை வெற்றியைத் தரும்



நம் நன்மையை மட்டுமே நினைக்கின்ற சுயநலம் , பாவங்கள் அனைத்திலும் முதற் பாவமாகும். " நானே முதலில் உண்பேன். மற்றவர்களை விட எனக்கு அதிகமான பணம் வேண்டும். எல்லாம் எனக்கே வேண்டும் , மற்றவர்களுக்கு முன்னால் நான் சொர்க்கத்தை அடைய வேண்டும்" எல்லோருக்கும் முன்னால் நான் முக்தி பெற வேண்டும் என்றெல்லாம் நினைப்பவன் சுயநலவாதி. சுயநலமற்றவனோ , "நான் கடைசியில் இருக்கிறேன். சொர்க்கம் செல்வதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நான் நரகத்திற்குச் செல்வதால் என் சகோதரர்களுக்கு உதவ முடியுமானால் அதற்கும் தயாராக இருக்கிறேன்" என்கிறான்.

இத்தகைய சுய நலமற்ற தன்மையே மதத்திற்கான உரைசல். சுயநலம் இல்லாதவனே மேலான ஆன்மீக வாதி , அவனே சிவ பெருமானுக்கு அருகில் இருக்கிறான். அவன் படித்தவனாக இருந்தாலும் படிக்காதவனாக இருந்தாலும் , அவன் அறிந்தாலும் அறியவில்லை என்றாலும் அவனே மற்ற அனைவரையும் விட சிவ பெருமானுக்கு அருகில் இருக்கிறான். சுய நலம் கொண்டவன் எல்லா கோயில் களையும் வழிபட்டிருந்தாலும், புண்ணியத்தலங்கள் அனைத்தையும் பார்த்திருந்தாலும் , சிறுத்தையைப் போல் தன் உடம்பு முழுவதிலும் மதச் சின்னங்களைத் தீட்டிக் கொண்டிருந்தாலும் அவன் சிவ பெருமானிடமிருந்து விலகியே இருக்கிறான்.

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை — பெரும் புயல் 'நிஷா'

06

கடுமையான மழையும் பெரும் புயலும் தரையில் தாண்டவமாடும் போது கடல் கொந்தளிப்பதும் வழமை. எனினும், நவம்பர் 25ஆம்திகதி ஏற்பட்ட 'நிஷா' புயலின்போது கடல் கொந்தளிப்பு எல்லை கடந்திருந்தது. மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தை விட குளங்கள், குழாய்க் கிணறு

**பண்ணை வீதி...**

கடல் கொந்தளிப்பின் காரணமாக பண்ணை வீதியில் சில பகுதிகள் அப்படியே கடலுடன் அள்ளுண்டு போனதென்பதை நேற்றையதினம் குறிப்பிட்டிருந்தோம்.

ஏற்கனவே உடைந்து திருத்தியமைக்கப்பட்ட வீதிகளே கடலோடு



சேதமடைந்த மண்டைதீவு தேவாலயம்

**வீதியைத் திருத்த அதிரடி நடவடிக்கை**

'நிஷா'வின் சீற்றத்தினால் பண்ணைவீதியின் ஒருபகுதி அள்ளுண்டு போனதால் தீவக மக்களின் போக்குவரத்தில் வள்ளங்களும் இணைந்து கொண்டன. தீவகத்திலிருந்து புறப்படும் வாகனங்கள் மண்டைதீவுச் சந்தியில் பயணிகளை இறக்கிவிட அதிலிருந்து வள்ளத்திலேறி பண்ணையில் இறங்கும் பயணச் சிக்கலை நீக்குவதில் சகல தரப்பினரும் இணைந்து விரைவாக பணியாற்றியதன் மூலம் பண்ணை வீதி திருத்தியமைக்கப்பட்டது.

தற்போது வாகனப்போக்குவரத்து இடம்பெறக்கூடியதாக இருந்தாலும் பண்ணை வீதியை நவீன தொழில் நுட்பங்களுக்கேற்ப மறுசீரமைப்பது காலத்தின் கட்டாய தேவையாகும்.

**மண்டைதீவை நிர்மூலமாக்கிய 'நிஷா'**

*1991 ஒக்டோபர் 18* தீவக் மக்கள் தங்கள் பூர்வீக மண்ணை விட்டு வெளியேறிய நாள். படை நடவடிக்கை காரணமாக தீவகத்திலிருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இவ்வாறு தீவகத்திலிருந்து வெளியேறிய மக்கள் 1996ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மீளவும் செல்லக்கூடிய சூழமைவு ஏற்பட்ட போதிலும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இடம்பெயர்வு அவர்களில் பலரை கொழும்பு மற்றும் வெளிநாடுகளுக்கு நகர்த்தியிருந்தது. இதனால் தீவகத்திற்கு திரும்பிச் சென்றவர்கள் மிகச் சொற்பமானவர்களாகவே இருந்தனர். இதற்கு மண்டைதீவும் விதிவிலக்கல்ல.

தீவகத்தில் அதிஉயர் பாதுகாப்பு வலயமாக மண்டைதீவு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதேநேரம், அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் குடியிருக்கவும் அங்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

யுத்தத்தினால் பல தடவைகள் பாதிக்கப்பட்ட அந்த ஊரில் இயற்கையின் சீண்டல்கள் அதிகம் இருப்பதில்லை. ஆனால் 'நிஷா'புயல் காற்றுக்கு மண்டைதீவை பதம்பார்த்து விடவேண்டுமென்பதில் அலாதிப் பிரியம் போலும்.

அதனால்,300 வருடங்கள் பழமையான வேப்பமரங்கள், தேக்குமரங்களை அடித்து முறித்துக் கீழே வீழ்த்தியது. காற்றின் வேகத்தில் சைவ ஆலயங்களும்.தேவாலயங்களும் சேதமடைந்தன.பனை.தென்னை முறிந்து வீழ்ந்ததில் வீடுகளும் சின்னாபின்னமாகின.

**ஊர்மனைக்கு வந்த கடல்**

நாலாபுறமும் கடலால் சூழப்பட்ட மண்டைதீவின் எழில் தோற்றம் அற்புதமானது.கடல்நீர் ஊர்மனைக்குள் வருவதைத் தடுக்கும் உயர்ந்த அணைகள், கரையோரத்தை பசுமையாக்கும் கண்ணாச் செடிகள், மாரிகாலத்தில் குடிகொள்ளும் சைபீரியன் பறவைகள், மண்டைதீவின் கிழக்குக் கடலில் வைகறைத் துயில் எழும் கதிரவன், வேளாண் செய்பயிர்கள், பொங்கும் கடல்வளம் என்ற அற்புதக் கிராமத்தை எப்படியாவது தொட்டு விடவேண்டும் என்பதில் கடல் கொண்ட ஆசை அலையாய் வந்து அணையில் மோதி முடியாதென்ற நினைப்பில் மீண்டும் முயற்சிக்கும். இக் காட்சியினை அனுபவித் தாலன்றி மொழி வழி விமர்சிப்பது இயலாத விடயம்.

இத்துணை சிறப்புமிக்க மண்டைதீவுக் கிராமம் யுத்தத்தின் கொடூரத்தில் பல பாதிப்பை தாங்கிக் கொண்டாலும் அணைக்கட்டுகள் வெட்டப்பட்டமையால் தன் நிலவளத்தை மெல்ல மெல்ல இழக்கலானது.

மண்டைதீவு அணைக்கட்டை திருத்தியமைத்து கடல் நீர் உள்வருவதைத் தடுக்குமாறு விடுவிக்கப்பட்ட கோரிக்கைகள் எவையும் பயனற்றுப் போனது.

இதுதொடர்பில் வலம்புரி தனது ஆசிரியர் தலையங்கத்திலும் சுட்டிக் காட்டியிருந்தது. எதற்கும் பதிலின்றிப் போக மண்டைதீவை பார்க்கும் நீண்ட கால ஆசையுடன் இருந்த கடலுக்கு 'நிஷா' புயல் விசா வழங்க, உடைந்த அணைக்கட்டை மேலும் உடைத்தெறிந்து கடல்நீர் ஊர்மனைக்குள் புகுந்து நிலவளத்தை சங்காரம் செய்தது.

## ஊரெழு பொக்கணை கிணற்றிலிருந்து தண்ணீர் வெளிப் பாய்ந்து ஓடியது

களிலிருந்து தண்ணீர் குபீரென வெளிப் பாய்ந்ததாகக் கண்டவர்கள் கூறினார்கள்.

ஊரெழுவில் உள்ள 'பொக்கணை' கிணற்றிலிருந்து ஊற்று வெளிப் பாய்ந்ததை நேரில் கண்டவர்களும் உளர்.

எனவே, யாழ்.குடாநாட்டின் வரலாற்றில் என்றும் இல்லாதவாறு வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு கடும் மழையே காரணம் என்பதற்கப்பால் கடல் கொந்தளிப்பின் போது நீர் நிலைகளில் ஏற்பட்ட பெருக்கமும் காரணம் என்ற முடிவுக்கு நாம்

அள்ளுண்டு போனதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையின் வரலாற்றில் தனித்துவமான பெருமைக்குரிய பண்ணைப் ப்ாலம் -வீதியின் சேதம் தீவக மக்களின் போக்குவரத்திற்குப் பெரும் இடையூறாக அமைந்தது.

பண்ணைப்பாலத்தை முதன் முதலாக அமைத்தபோது அதன் வரலாற்றை மண்டைதீவு அகிலேஸ்வர சர்மா 'பண்ணைப் பாலக் கும்மி' என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்.

கும்மிப் பாடல் மூலம் பண்ணைப் பாலத்தின் வரலாற்றை பேசுமளவிற்கு அதன் முக்கியத்துவம் வெளிப் படுத்தப்படுகின்றது.

அதேநேரம் பண்ணை வீதி சேதமடைந்தபோதெல்லாம் தீவக மக்கள்பட்ட பெரும் துயரை மனித மொழிகளில் வர்ணிப்பது முடியாத காரியம்.



மண்டைதீவில் தென்பகுதி ஊடகவியலாளர்கள் அருட்திரு றொசான் அடிகளாருடன் சந்திப்பு

வரலாம். எதுவாயினும் இவை புவியியல் ரீதியாக நிரூபிக்கப்படுவது கட்டாயமானதென்பதுடன் புவியியலின் புதிய கண்டு பிடிப்புக்களுக்கு நிஷாவின் பதிவுகள்- அனுபவங்கள் பெருந்துணை புரியும் என்பதும் மறுக்க முடியாத உண்மை.



தீவகத்திற்கான பயணம் கடல்கொண்ட பண்ணை வீதி

**என்.விஜயன்**

(வளரும்)




இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நாளை ஆரம்பமாகின்றது. இதனை முன்னிட்டு இந்திய-இங்கிலாந்து அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் நேற்று ஈடுபட்டபோது....

# ஆஸி. அணியை வீழ்த்த எமக்கு நல்ல வாய்ப்பு

## சிமித் நம்பிக்கை

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தாங்கள் வெற்றி பெற சிறந்த வாய்ப்பு இருப்பதாக தென்னாபிரிக்க அணித் தலைவர் சிமித் நம்பிக்கை தெரிவித்தார்.



கிராம் சிமித் தலைமையிலான தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட் 5 ஒருநாள் மற்றும் இரண்டு இருபது -20 போட்டிகளில் விளையாடுவதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பேர்த் வந்து சேர்ந்தது.

தென்னாபிரிக்க-அவுஸ்திரேலிய அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இனவெறி கொள்கையால் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து நீக்கப்பட்டிருந்த தென்னாபிரிக்க அணி 1992 ஆம் ஆண்டு மீண்டும் விளையாட அனுமதிக்கப்பட்டது.

அதன் பின்னர் அந்த அணி அவுஸ்திரேலிய மண்ணில் இதுவரை தொடரை வென்றதில்லை. இந்த முறை அவுஸ்திரேலியாவை வீழ்த்தும் வியூகங்களுடன் தென்னாபிரிக்க அணி புறப்பட்டு வந்துள்ளது.

இது குறித்து தென்னாபிரிக்க அணித் தலைவர் கிராம் சிமித் நிருபர்களிடம் கூறியதாவது, இந்த பருவ காலத்தில் 5 சுற்றுப் பயணங்களிலும் நாங்கள் வெற்றி பெற உண்மையிலேயே நல்ல வாய்ப்பு உள்ளது. எல்லோருக்கும் இது தெரியும். துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு இரண்டிலும் எங்களது அணி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

எங்களது வேகப் பந்து வீச்சாளர் டெல்ஸ்ரெயின் அபாரமாக பந்து வீசி வருகிறார். உலகில் சிறந்த பந்து வீச்சாளர்களில் அவரும் ஒருவராக விளங்குகிறார். நிற்னி மிகவும் அனுபவம் வாய்ந்தவர். மோர்கல் வளர்ந்து வரும் வீரர்.

எங்களது தொடக்க வரிசை மற்றும் மத்திய வரிசை துடுப்பாட்டம் வலுவாக உள்ளது. கலிஸ் உலகின் சிறந்த சகலதுறை ஆட்டக் காரர். இதே போன்று மார்க் பவுச்சர் மிகவும் அனுபவசாலி. புள்ளி விபரங்களை எடுத்துப் பார்த்தால் அவர் தான் உலகின் தலைசிறந்த விக்கெட் காப்பாளர் என்பது தெரியும் என சிமித் கூறினார்.

தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் கூறுகையில்,

முன்பெல்லாம் ஆடுகளத்தை வைத்தே எந்த அணி வெற்றி பெறும் என்பதை கணித்து விடலாம். சிட்னியை எடுத்துக் கொண்டால் ஷேன் வோர்ன் 10 விக்கெட்டுக்களையும் கைப்பற்றிவிடுவார். ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது.

வோர்ன் ஓய்வு பெற்றுவிட்டார். சொந்த மைதானம் உள்ளூர் அணிகளுக்கு சாதகமாக இருக்குமா என்பதை சொல்ல முடியாது. பேர்த் ஆடுகளத்தை அவர்கள் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு உதவும் வகையில் தயாரித்தால் எங்களது தாக்குதலை யும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டிவரும் என்றார்.

தென்னாபிரிக்க அணி கடைசியாக பங்கேற்ற 9 தொடர்களில் ஒன்றைக்கூட இழ நந்தில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# பிரட்மன் பயன்படுத்திய துடுப்பு ஏலத்தில்

(சிட்னி)

கிரிக்கெட் உலகின் பிதாமகன் என்று அழைக்கப்படும் மறைந்த அவுஸ்திரேலிய வீரர் டொன் பிரட்மன் பயன்படுத்திய கிரிக்கெட் துடுப்பு ஏலம் விடப்படவுள்ளது.

1930ஆம் ஆண்டு குவின்ஸ்லாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் நியூ சவுத்வேல்ஸ் சார்பில் விளையாடிய பிரட்மன் இந்த துடுப்பை கொண்டு 452 ஓட்டங்கள் குவித்தார்.

1958 ஆண்டு பாகிஸ்தான் வீரர் ஹனீப் முகமது 499 ஓட்டங்களை குவிக்கும்வரை பிரட்மன் எடுத்த 452 ஓட்டங்களே முதல்தர போட்டிகளில் எடுக்கப்பட்ட அதிகபட்ச ஓட்டங்களாக இருந்தது.

பின்னர் 1994ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் வீரர் லாரா உள்ளூர் போட்டிகளில் 501 ஓட்டங்ளை குவித்தார்.

இந்நிலையில் பிரட்மன் பயன்படுத்திய அந்த சாதனைத் துடுப்பு தற்போது ஏலத்திற்கு வந்துள்ளது. அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை இதனை ஏலம் விடுகிறது. அடுத்த வாரம் மெல்போர்ன் நகரில் இந்த ஏலம் நடை பெறுகிறது. (5)

# சம்பியன்ஸ் லீக் தொடர் எப்போது?

(மெல்போர்ன்)

ஒத்திவைக்கப்பட்ட சம்பியன்ஸ் லீக் போட்டிகளை எப்போது நடத்துவது என்பது குறித்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முடிவெடுக்கப்படவுள்ளது.

இம் மாதம் சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர்நடைபெறவிருந்தது. எனினும் மும்பை தாக்குதலை அடுத்து எழுந்த சூழ்நிலையால் இந்த தொடர் ஒத்தி வைக்கப் பட்டது.

தற்போது தொடரை எப்போது நடத்துவது என்பது குறித்து சம்பந்தப்பட்ட நாடுகள் ஆலோசனை நடத்த தீர்மானித் துள்ளது.

இந்நிலையில் நாளை மறுதினம் இந்தியா - அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த கிரிக்கெட் அதிகாரிகள் தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்தி இது குறித்து முடிபெடுக்க உள்ளனர்.

எல்லா நாடுகளுக்கும் ஏற்ற ஒரு நிகழ்ச்சி நிரலை தயாரிப்பது பற்றி அப்போது விவாதிக்கப்படும் என்று தெரிகிறது. (5)

# பந்துவீச அதிக நேரம்; கடும் நடவடிக்கை

(கேப்டவுன்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் நிர்வாக குழுகூட்டம் தென்னாபிரிக்காவில் உள்ள கேப்டவுனில் நடந்தது.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் பந்து வீச அதிக நேரம் எடுத்துக் கொள்வதால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

அப்போது பந்து வீச அதிக நேரம் எடுத்துக்கொள்ளும் அணிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பது என முடிபு எடுக்கப் பட்டது.

அதே போல வீரர்கள் ஒருவருக்கொருவர் திட்டிக்கொண்டால் அவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுப்பது என்றும் முடிபு எடுத்தனர். (5)

# ஆஸி. அணியில் வோட்ஷனுக்கு இடம்

தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் சகலதுறை ஆட்டக்காரர் ஷேன் வோட்ஷன் மற்றும் சுழற் பந்து வீச்சாளர் ஜேஸன் கிரஜ்ஜா ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.



அவுஸ்திரேலிய -தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி வரும் 17ஆம் திகதி பேர்த்தில் ஆரம்பமாகவுள்ளது.

**அணி விபரம்:**

மத்யூஹைடன், சைமண்ட்ஸ் ஹட்டிச், ரிக்கி பொன்டிங் (அணி தலைவர்), மைக்கெல் ஹஸி, மைக்கெல் கிளார்க், அன்ட்ரூ சைமன்ட்ஸ், ஷேன் வோட்ஸன், பிரெட் ஹடின் (வி.கா), பிரெட்லீ, ஜேஸன் கிரஜ்ஜா, மிச்சல் ஜோன்ஸன், ஸ்டுவெட் கிளார்க். (5)

# அபுதாபி அல்லது கொழும்பில் கிரிக்கெட் தொடரை நடத்துவோம்

## இந்தியாவிடம் கெஞ்சுகிறது பாகிஸ்தான்

இந்திய அணி பாகிஸ்தான் வர வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. மும்பை தாக்குதலில் பாகிஸ்தானுக்கு தொடர்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் இரு நாடுகளுக்கு மத்தியில் சுமுகமான உறவு இல்லை.

இந்நிலையில் அடுத்த மாதம் பாகிஸ்தானில் நடக்க வுள்ள கிரிக்கெட் தொடரில் பங்கேற்க இந்திய அணி விரும்பவில்லை. இந்திய அரசு எவ்வித ஒப்புதலும் அளிக்காத நிலையில் கிரிக்கெட் நிர்வாகம் மௌனம் சாதித்து வருகிறது.

இதனால் தொடரை வேறு இடத்துக்கு மாற்றலாமா? என இந்திய கிரிக்கெட் சபையிடம் பாகிஸ்தான் கேட்கவுள்ளது. இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் கூறுகையில்,

தொடரில் பங்கேற்பது குறித்து இந்தியவிடமிருந்து எவ்வித பதிலும் இதுவரை வரவில்லை. இந்திய கிரிக்கெட் சபையிடம் தொடர்பு கொள்ள முடியவில்லை. இதனையடுத்து நாளை மறுதினம் சென்னையில் நடக்கும் ஆசிய கிரிக்கெட் சபை நிர்வாகிகள் கூட்டத்தில் இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகளுடன் பேச தீர்மானித்துள்ளோம். அப்போது பாகிஸ்தானுக்கு வராவிட்டாலும்; அபுதாபி, கொழும்பு, சார்ஜா ஆகிய இடங்களில் ஏதாவது ஒன்றில் டெஸ்ட் தொடரிலாவது பங்கேற்குமாறு வேண்டுகோள் விடுக்கவுள்ளோம் என்றார்.

பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக 2009ஆம் ஆண்டு நடக்கும் அனைத்து உள்நாட்டு கிரிக்கெட் தொடர் மற்றும் சர்வதேச தொடர்களை அபுதாபியில் நடத்த பாகிஸ்தான் ஆலோசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அரசாங்கத்தை இந்தியா எச்சரிக்க வேண்டும்

## வைகோ பிரதமருக்கு கடிதம்

(சென்னை)

இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கருத்து இந்தியாவையும் இந்திய மக்களையுமே இழிவுபடுத்துவதாகும். எனவே அவரது கருத்தை இந்தியா கண்டிப்பதுடன், இது குறித்து இலங்கை அரசுக்கும் எச்சரிக்கை செய்ய வேண்டும் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு வைகோ நேற்று செவ்வாய்க்கிழமை எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மிகுந்த ஆணவத்தோடும், திமிரோடும் தெரிவித்திருக்கின்ற கருத்துக்கள் இலங்கை அரசின் அதிகார பூர்வ இதழான சண்டே ஒப்சேவர் டிசம்பர் ஏழாம் திகதி இதழில் வெளியாகி இருப்பதை மிகுந்த வேதனையோடு தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

தமிழ் நாட்டு அரசியல் கோமாளிகள் சொல்லுகின்ற கருத்துக்களை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு செவி மடுக்காது. எனவே போர் நிறுத்தம் செய்யுமாறு இலங்கை அரசை இந்தியா அரசு ஒரு போதும் கேட்டுக்கொள்ளாது என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் இலங்கையில் போர் நிறுத்தம் செய்வதில் இந்திய அரசுக்கு உடன்பாடே கிடையாது என்றும் அவர் கூறியுள்ளார்.


2008 நவம்பர் 12ஆம் திகதி தமிழ் நாடு சட்டமன்றத்தில் இலங்கையில் போர் நிறுத்தம் மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை இந்திய அரசு உடனே மேற்கொள்ள வேண்டும் என்று கோரி அனைத்துக் கட்சியினராலும் ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருப்பதை தாங்கள் அறிவீர்கள்.

இந்தத் தீர்மானம் தமிழ்நாட்டில் வாழ்கின்ற ஏழு கோடி தமிழ் மக்களின் ஒட்டு மொத்த கருத்து ஆகும். ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசு ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்து வருவதைக் கண்டு தமிழ் நாட்டில் உள்ள ஏழு கோடி தமிழர்களும் மிகுந்த மன வேதனைக்கு ஆளாகி உள்ளனர்.

அவரது இந்தக் கருத்து இந்திய அரசு போர் நிறுத்தம் செய்யுமாறு அவரிடம் கேட்கவில்லை என்பதை உள்ளங்கை நெல்லிக் கனி போலத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது.

2008 ஒக்ரோபர் 2ஆம் திகதி அன்று தாங்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காக நாங்கள் இத்தகைய பாதுகாப்பு உதவிகளை செய்து இருக்கின்றோம் என்பதை ஒப்புக்கொண்டு இருக்கிறீர்கள்.

சரத் பொன்சேகாவின் கருத்து இந்தியாவையும் இந்திய மக்களையுமே இழிவுபடுத்துவதாகும். எனவே அவரது கருத்தை இந்தியா கண்டிப்பதுடன் இது குறித்து இலங்கை அரசுக்கும் எச்சரிக்கை செய்ய வேண்டும்.



சரத் பொன்சேகா நிபந்தனை அற்ற மன்னிப்பு கோர வேண்டும். அவரது கருத்து குறித்து இலங்கை ஜனாதிபதி விளக்கம் அளிக்க வேண்டும் என இந்தியா கோர வேண்டும்.

இந்தியாவின் கோரிக்கையை இலங்கை அரசு ஏற்காமல் ஒதுக்கித் தள்ளினால் இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவரை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

### இராணுவத் தளபதிக்கு எதிராக தொடரும் போராட்டங்கள்

(சென்னை)

தமிழக அரசியல் கட்சித் தலைவர்களை இழிவுபடுத்திப் பேசிய இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உருவப் பொம்மை எரிப்புப் போராட்டம் புதுச்சேரியிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகள், சமுதாய இயக்கங்கள் சார்பில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் ஒதியஞ்சாலை, அண்ணாசிலை அருகில் நடைபெற்றது.

போராட்டத்திற்கு அரசியல் கட்சிகள், சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர். போராட்டத்தில் பல்வேறு கட்சி, இயக்கத்தைச் சேர்ந்த 250 பேர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் கீழ்க் காணும் கோரிக்கைகள் எழுப்பப்பட்டன.

★ தமிழக அரசியல் கட்சித் தலைவர்களை கோமாளிகள் என இழிவுபடுத்திப் பேசிய இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

★ மத்திய அரசு உடனடியாக இந்தியாவிலுள்ள இலங்கைத் துணைத் தூதுவரை அழைத்து விளக்கம் கேட்கவேண்டும்.

★ இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்த வேண்டும்.

★ இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தை மூட இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்திய அரசு, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். (ச-5)



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான குழுவினரை யாழ். இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அழைத்துச் செல்வதை படத்தில் காணலாம்.

(படங்கள்: பாதுகாப்பு அமைச்சு)

## இராணுவத் தளபதியின்...

விட்டால் விடுதலைப் புலிகளிடம் இருந்து பெறும் வருமானம் குறைந்து விடும். அதனால் அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசி வருகின்றனர் என்று அவர் கூறினார்.

இராணுவத் தளபதியின் இந்தக் கருத்துக்கு தமிழக தலைவர்கள் பலத்த கண்டனம் தெரிவித்தனர். இலங்கை அரசிடம் இந்தியா கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்திருந்தார்

மேலும் சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரக அலுவலகம் எதிரே ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவித்தார்.

இந்த நிலையில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் அலோக் பிரசாத், பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கருத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

இராணுவத் தளபதியின் பேச்சுக்கு வருத்தம் தெரிவித்த கோத்தபாய ராஜபக்ஷ, இனி இது போன்ற கருத்துக்கள் கூறப்படுவது தவிர்க்கப்படும் என்று உறுதியளித்தார்.

இத்தகவலை டில்லியிலுள்ள வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் விஷ்ணு பிரகாஷ் உறுதிப்படுத்தியுள்ளார். (ச-5)

## எரிபொருட்களின் விலைகள்...

இல்லை. நாட்டை மீட்டெடுப்பதுடன் நின்றுவிடாது சமாதானத்தை ஏற்படுத்த திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக வடக்கே பயங்கரவாதிகள் குண்டுகளை வெடிக்க வைப்பதைப் போன்றே தென்பகுதியிலுள்ள அரசியல்வாதிகளும் சதி செய்து வருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கிராமங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமாக நாட்டை கட்டியெழுப்புவதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கெரவலப்பிட்டியவில் அமைந்துள்ள அனல் மின் உற்பத்தி நிலையத்தின் முதல் கட்ட மின் உற்பத்தி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த அனல் மின் உற்பத்தி நிலையத்தை சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை 10 மணியளவில் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிலையத்தின் மூலம் நாட்டின் மின்சாரத் தேவைக்கு மேலும் 300 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

300 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அமைக்கப்பட்டுவரும் இந்த மின் உற்பத்தி நிலையம் இரண்டு வகையான செயற்பாடுகளைக் கொண்டதாக இருக்கும்.

முதல்கட்டமாக இந்த நிலையத்தின் மூலம் 200 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் இலங்கை மின்சார சபைக்கு வருடத்திற்கு 18 பில்லியன் ரூபாயை சேமிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-5)

## முல்லைத்...

அலம்பில் வடக்குப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின்குழுக்களைஇலக்கு வைத்து இராணுவத்தினரின் 59-வது படைப்பிரிவில் பல்வேறு தாக்குதல்களை நடத்தியிருப்பதுடன் விடுதலைப் புலிகளின் பலம் மிக்க பகுதியான நெடுங்கேணியை நோக்கி முன்னேறி வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது.

அத்துடன் கிளிநொச்சி நகரை கைப்பற்றும் நோக்குடன் ஏ-9 வீதியில் கனகராயன் பகுதியில் இராணுவத்தினர் தாக்குதல்களில் ஈடுபட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## பாதுகாப்பு...

கேட்டறிந்து கொண்டார்.

இக் குழுவில் எயார் சீவ் மார்ஷல் டொனால்ட் பெரேரா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் வருகை தந்தனர். (எ-5)

## 64 லொறி...

தொடரணியுடன் பயணித்த ஐ.நா. அதிகாரி ஒருவர், ஓமந்தையில் இருந்த சோதனைச் சாவடி தற்போது நெடுங்கேணிக்கு நகர்த்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

தற்போதைய தொடரணியில்; அரிசி, மா மற்றும் யுனிசெவ் நிறுவனம் இங்குள்ள பாடசாலைகளுக்காக அனுப்பிய பொருட்கள் கொண்டு செல்லப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ச-5)

## ஐக்கிய தேசியக் கட்சிக்குள்...

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி வந்த அமைச்சர் கரு ஜெயசூரியவுக்கு பிரதித் தலைவர் பதவி வழங்கியமையால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் எழுந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால உறுப்பினராக கரு ஜெயசூரிய இருந்தாலும் இடை நடுவில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு தாவிச் சென்று அமைச்சுப் பதவியையும் ஏற்று ஆதரவு வழங்கி வந்தார்.

இதனால் கரு ஜெயசூரியவை ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழு கட்சியின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் நீக்கியிருந்தது.

இந்நிலையில் மீண்டும் கட்சியில் இணைந்துள்ள கரு ஜெயசூரியவுக்கு பிரதித் தலைவர் பதவி வழங்கப்பட்டது எதற்காக என்று கட்சியின் மூத்த மற்றும் இளம் உறுப்பினர்கள் சிலர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்விகளைத் தொடுத்தனர்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி திஸநாயக்கவை பிரதித் தலைவராக நியமிக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

கட்சித் தலைமையகமான சிறிகோத்தாவில் நேற்று உறுப்பினர்கள் சிலர் தம்மிடையே வாக்குவாதப்பட்டதாகவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக குரல் எழுப்பியதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பயங்கரவாதத்துக்கு எதிரான போரை முன்னெடுத்துச் செல்வதற்காகவே மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு 17 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சென்று ஆதரவு வழங்கியிருந்தேன் என்று அமைச்சர் பதவியிலிருந்து விலகிய கரு ஜெயசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பதவியிலிருந்து நேற்று விலகிய பின்னர் கரு ஜெயசூரிய அறிக்கை ஒன்றினை நேற்று வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டினதும் மக்களினதும் நன்மை கருதி பயனுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவை நான் எடுத்துள்ளேன்.

தேவை ஏற்பட்டால் வரலாற்றுச் சிறப்பு மிக்க இன்னுமொரு முடிவை மக்களுக்காக நான் எடுப்பதற்கு தயங்க மாட்டேன்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரை தொடர வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியும் போருக்கு ஆதரவு வழங்குகிறது. தற்போது அந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது.

அரசிற்கு ஆதரவு வழங்கிய இரண்டு வருட காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையை நான் ஒருபோதும் விமர்சித்ததில்லை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து அரசாங்கத்தில் இணைந்திருந்த ஜனநாயகக் குழுவின் 16 பேரும் அரசாங்கத்திற்கு தொடர்ந்து ஆதரவு தெரிவிப்பதாக ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று அலரிமாளிகையில் ஜனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்பின்போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.